21

உ

சமரசம்.

ஓர் தமிழ் மாத வெளியீடு.

வருட சந்தா ரூ. 1—0—0

Vol. 3. APRIL, 1937. Book 1

OFFICE OF THE REG...
2- APR 1937
MADRAS

இராமலிங்க சுவாமிகள்.

Edited & Published by M A Varadarajan
Printed at the S. R. V. Press, Villupuram

"சமரஸம்"

ஓர் மாதாந்த பிரசுரம்.

"சமரஸம்" இராம சீரமைப்புத்திட்டங்கள், பொருளாதாரம், சுதேச கைத்தொழில்கள், சமரஸ சன்மார்க்க சதாசாரம் இவைகளை மக்களிடை பரப்புதற்கு அரிய தொண்டுசெய்யும் ஓர் தேசியபத்திரிகை. மாதிரி காப்பிக்காக 2 அணு ஸ்டாம்பு அனுப்பவும்.

வருட சந்தா		தனிப்பிரதி	
உள்நாடு ரூ.	1—0—0	உள்நாடு ரூ.	0—2—0
வெளிநாடு ரூ.	1—8—0	வெளிநாடு ரூ	0—3—0

100க்கு மேல் ஆர்டர் அனுப்பும் ஏஜண்டுகள் முன்பணமனுப்பினால் பிரதி 1க்கு $1\frac{1}{2}$ அணுமேனிக்கு கொடுக்கப்படும்.

விளம்பர விகிதம்

முன் பணமாகக் கொடுக்கவேண்டும்.

ஒரு தடவைக்கு	முழுப்பக்கம்	ரூ	6—0—0.
,,	அரைப்பக்கம்	ரூ	3—8—0.
,,	கால்பக்கம்	ரூ	2—0—0.

நீடித்த விளம்பரங்களுக்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்.

குறிப்பு:- இதிலிருந்து மூன்றாவது வால்யம் ஆரம்பமாகிறது. இனி 40 பக்கங்களுக்கு குறையாமல் பத்திரிகை வெளிவரும். பல கனவான்கள் ஆயுள் சந்தா கொடுப்பதாய் வாக்குறுதி செய்து கையொப்பமிட்டிருப்பது போற்றத்தக்கது. சுகாதார வசதியை கோரி ஆபீஸ் கல்லக்குறிச்சிக்கு மாற்றப்பட்டிருக்கிறது.

மானேஜர்:— "சமரஸம்" ஆபீஸ்,

கல்லக்குறிச்சி, தென்னாற்காடு ஜில்லா.

[illegible] 2-APR 1937

சமரஸம்.

செயற்பால தோருமறனே யொருவன்
குயற்பால தோரும்பழி—குறள்

சமரசச் செல்வி } எப்ரல் ௴ 1937 { Vol. 3 Book. 1

பிரார்த்தனை.

ஹே! அருளாளா! ஆனந்த சொரூபா! உண்மை உள்ளங்களில் பொங்கி வழியும் அன்பின் ரசமே! உத்தமர்கள் கூடிக் குலாவும்போது உதித்த இன்பசுகமே!

எமது சகோதரர்களின் தீய எண்ணெங்களையும் சந்தேகங்களையும் அவர்கள் மனதினின்று அகற்றும். சகோதர வாஞ்சையும் ஒற்றுமையும் உண்டுபண்ணும். "மனிதன் புல்லுக்கு சமானமாயிருக்கிறான். புல்லின் புஷ்பங்களைப்போல் பூக்கிறான்; காற்று வீசினவுடனே அது மறைந்துபோய்விட்டது" என்னும் வேதநெறியை அவர்கள் உணர்வார்களாக. அநித்திய உலகத்தில் நித்திய பொருள்களைக்காண அவர்கள் வாய்பாடுவதாக! அவர்கள் செய்கை மனிதரூபமாக நடமாடும் பரந்தாமனுக்கு உரிமையாகுக.

மனிதன் மனிதனை வஞ்சிப்பதும் அவனுக்கு பலவாற்றாலும், தீங்கு சூழ்வதையும் விட்டு அன்பை பெருக்கி மனிதக்கடவுளின் முன்னேற்றத்திற்கும் சமரச நிலைமைக்கும் கைதூக்கிவிடும் காலம் என்று காண்பது? அவர்கள் உள்ளம் அன்பின் வெள்ளத்தால் சுத்தியாக்கப்படும் நாள் என்று உதயமாகும்?

காலக்கிளியே ஓர் சுனி சொல்லாய்?

சமரஸம்.

சமரஸம்:—சமத்துவம், சமதி (Equal) பாரபக்ஷமின்மை (Balance of the law) in verb சமரசப்படுத்து, ஆறுதல் சொல்லு, தேற்று சமாதானம் செய்.

"சமரஸம்" என்று கேட்டவுடனே சில அன்பர்கள் சந்தேகத்தில் மூழ்கிவிடுவார்கள். பெரிது, சிறிது, மேடு, பள்ளம், நல்லது, கெட்டது, பக்தன், சுயநலன், உபகாரி, அபகாரி முதலிய எல்லா படிகளும் ஒரே நிலையில் வந்துவிட்டால் உலகம் எவ்வாறு நடைபெறும் என்னும் கேள்வியை பொரிப்பர்.

உண்மையில் அவ்வாறல்ல. வெளித்தோற்றத்தால் தோற்றும் சராசரப்பொருள்களனைத்தும் வெளிக்கண்களுக்கு என்றும் பெரியனவும் சிறியனவுமாகவே தோற்றும். வெளியுலகத்தில் அவைகளுள் பல்வேறு விஷயங்களில் மாறுபாடல்கள் தோன்றிய போதிலும், ஆழ்ந்துயோசிக்கும் பெருமனத்தார்க்கு அவைகளை சமரசநிலைமையிலேயே ஆண்டவன் படைத்துள்ளான் என்பது புலனாகுகின்றது. அவ்வாறே நமது சமரசச்செல்வி வெளித் தோற்றத்தால் காணப்படும் உயர்வு, தாழ்வு, பெரிது சிறிது என்னும் மாறுபாடல்களையும் இயற்கை நெறியையும் சமரசப் படுத்த தொண்டுசெய்வதல்ல. இந்த உயர்வு தாழ்வுகளெல்லாம் உலகமுள்ளளவும் இருந்தே தீரும்.

மக்களின் மனதையும் மனதில் தோன்றும் தவறான எண்ணங்களையும் மாற்றி சமரச நோக்கமென்றும் ஞானோதயம் உதிக்குமாறு பெரிதும் தொண்டுசெய்வாள் இரண்டாவதாக உலகநடைக்குரிய மாறுபாடல்களாகவுள்ளவைகள் அளவு மீறி அதிகப்படி வெறி கொண்டு சச்சரவிடும் ஜாதி, சமயம், ஊழல்கள், மதவெறி, உயர்வு தாழ்வு என்றும் அகந்தை அடிமை ஆண்டான் என்றும் இறுமாப்பும், தனக்கெனவாழும் புதிய நாகரீக ஊழல் களும் அறவே நீங்ககூடியவரை சாந்த முறையில் பிரசாரம் செய்து சாந்தி செய்ய முயல்வது நமது சமரசச்செல்வியே. மொத்தத்தில் உள்ள சுத்தியென்னும் மனமாறுதல் ஒவ்வொருவருக்கும் இன்றி யமையாத சாதனங்களுள் முதலானது. உலகத்திலுள்ள பேதங்

களெல்லாம் மனமொன்று படாததற்கே காரணங்களாயுள்ளன மனமொன்றுபடுவதற்கு மாற்றிப் பிறக்கவேண்டும். எப்படி மாற்றிப் பிறப்பது என்னும் முறைகள் ஒவ்வொன்ருக இந்த "சமரஸம்" என்னும் தலைப்பின்கீழ் மாதாமாதம் வெளிவரும்.

C. சாமிக்கண்ணு அவர்கள் எழுதியது.

சமரசச்செல்விக்கு வேண்டுகை.

உலகில் மக்களை நல்வழிப்படுத்தி அவர்களைக் கல்வியிலும் தொழில் வன்மையிலும், செல்வத்திலும், தேசப் பொதுப்பான்மையிலும் மேம்பட்டவீரர்களாக விளங்குமாறு தொண்டாற்றும் பத்திரிகைகள் அனந்தம். தற்காலம் மக்களுக்கு அடிமை மோகமும், ஏழ்மைத்தனமும் மேலிட்டு மனித சமூக ஒழுக்கத்தையும் மனச்சாக்ஷியையும் குலைத்து, கஞ்சி, கஞ்சி என்ற கூச்சல் மேலிட்டு பிழைக்க வழியும் உதவியுமில்லாமல் செய்யும் பலவகை புறட்டுகள், சூழ்ச்சிகள் வளர்ந்துவரும் இன்றைய காலநிலைக்கும் தற்கால அவசியத்திற்கு ஏற்க பாடுபடுவதும், தமாஷ் விகடம், நவநாகரீகம், ஆடம்பர வாழ்க்கையின் ஆராய்ச்சி, புதியகலை முதலியவைகளில் சிந்தை செலுத்தாது. தற்காலம் பொது ஜனங்களின் மனதைப் புண்படுத்திக்கொண்டுவரும் ஏழ்மைத்தனத்தை ஓட்டுவதே முதற் பணியாக ஏற்று பொதுநலப்பணியாற்றும் பத்திரிகை நமது "சமரசச் செல்வியே" என்பது எனது சிற்றறிவினுல் ஆராய்ந்து ஓர்ந்த தொன்ருகும்.

உண்மையும் நன்மையும் ஓங்கவேண்டுமானல், ஆண்டவன் இந்த சமரசப் பத்திரிகையை வளர்ப்பாராக.

நமது நண்பர்கள் ஒவ்வொருவரும் சந்தாதாரராக சேர்ந்து உதவலாம். உயர் நோக்கமுள்ள பெரியார் பலர் ஆயுள்சந்தா கொடுத்து போற்றிவந்தால் "சமரசச்செல்வி" நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாக தினே தினே விர்த்தியடைந்து மக்களுக்கு இன்பமூட்டுமென கோருகிறேன்.

கடன் படல்.

சரீர சுகத்தின் பொருட்டாவது, தருமத்தின் பொருட்டாவது, யாவரும் தங்கள் தங்கள் வரவுக்கேற்ப, மட்டாகச்செலவு செய்தல் வேண்டும். வரவுக்கு மேலே செலவுசெய்யப் புகுவோர் கடன்படத் தலைப்பட்டுப் பெருந்துன்பத்தையும், அவமானத்தையும் அடைவர். கடனுடையவருக்கு இம்மை மறுமை இரண்டிலும் இன்பமே இல்லை. எத்துணைப் பெருஞ் செல்வராயினும் கடன்படத் தலைப்படுவோர், விரைவிலே தங்கள் செல்வமெல்லாம் இழந்து தரித்திரராவர். இம்மையிலேயே மனிதர்கள் அனுபவிக்குந் துன்பங்களெல்லாவற்றினும், கடனால் உண்டாகும் துன்பத்தின் மிக்க துன்பம் யாதொன்றும் இல்லை. தனிகனைத் தாயைக் கண்டாற்போலப் பேரானந்தத்தோடு கண்டு அவனிடத்தே கடன் பட்டவர், பின்பு அவன் எதிர்ப்படும்போது அவனைப் பேயைக் கண்டாற்போலப் பெரும்பயத்தோடு கண்டு நடுநடுங்கி ஒளிப்பிடந் தேடி ஓடுவர். தனிகன்-கடன் கொடுக்கிறவன்.

பொருளில்லையானால், கூலித்தொழில் செய்து வயிறு வளர்க்கினும் வளர்க்கலாம்; பிச்சையேற்று உண்ணினும் உண்ணலாம்; பசிநோயால் வருந்தி இறக்கினும் இறக்கலாம். இவைகளெல்லாம் அவமானங்களல்ல; இவைகளினாலே பிறருக்கு யாதொரு கேடும் இல்லை; இவைகளினால் ஒருவருக்கும் அஞ்சவேண்டுவதில்லை. இவைகளாலே துன்பம் உண்டாயினும் அத்துன்பமே மிகச்சிறியது; அச்சிறு துன்பமும், நல்லறிவோடு அமைந்து சிந்திக்கும்போது நீங்கிவிடும். கடனோ இப்படிப்பட்டதன்று. பெருவியாதி முதலிய கொடுநோய்களினால் உண்டாகுந் துன்பத்தைப் பொறுக்கினும் பொறுக்கலாம்; கடனால் உண்டாகுந் துன்பத்தைப் பொறுத்தல் அரிது அரிது.

கடன்படக்கூசாதவர் பொய் சொல்லக்கூசார்; பொய்ப்பத்திரம் பிறப்பிக்கக் கூசார்; பொய்வழக்குப் பேசக் கூசார்; விசுவாசகாதகஞ் செய்யக் கூசார்; வழக்குத்தீர்ப்பிலே பரிதாபனம் வாங்கக்கூசார்; களவு செய்யக்கூசார்; கொலை செய்யக் கூசார்; கடன்படல் எல்லாப்பாவங்களையும் வலிந்து கைப்பிடித்தழைக்குந்தூது.

ஒருவனுக்கு தன் பொருளிற் சிறிது கடனாகக் கொடுத்தவன், அம்முதற்பொருள் வட்டியோடு வரும் வரும் என்று நெடுங்காலம் எதிர்ப்பார்த்துக்கொண்டிருக்கிறான்; சிலபோது தனக்கு முட்டுவந்தவிடத்துத் தன் முதற்பொருளையும் வட்டியையும் நம்பித்தான் பிறனிடத்தே கடன்படுகின்றான்; தான் கொடுத்த கடன் வராதபொழுது, தன் பிறமுயற்சிகளை விடுவித்துக் கடனுடையவனைப் பலநாளும், பலதரமும் தேடித்தேடிக் கேட்டுக் கேட்டு அலைந்து திரிகின்றான்; அவன் அக்கடனைத்தீராதபோது, அவன்மீது தர்மசபையிலே வழக்குத்தொடுத்து, தன்காலத்தையும் தன்னெஞ்சிய பொருளையும் பலவாற்றாலும் அவ்வழக்கிலே போக்குகின்றான்; அவ்வழக்கை நடத்துதற்குத் தன்னெஞ்சிய பொருள் போதாதபோது பிறனிடத்தே கடன்படுகிறான்; நெடுங்காலஞ் சென்றபின், தான் அவ்வழக்கிலே தோல்வியடையாது வெல்வியடைந்தாயினும், கடனுடையவனிடத்தே தாவரசங்கமப பொருளில்லாதபோது, ஏங்கி வருந்தி மாய்கின்றான். தாவரசங்கமப்பொருள் கண்டு விக்கிரயஞ்செய்தவிடத்தும், அவைகளின் விலை தனக்கு வரற்பாலனவாகிய முதலுக்கும் வட்டிக்கும் வழக்குச் செலவுக்கும் போதாதபொழுது தான் பிறனிடத்தே வாங்கியக் கடனைத் தீர்த்துவிட்டு 'என்செய்வேன் என்செய்வேன்' என்று பெருமூச்செறிந்து கவலைக்கடலின் மூழ்கித் தன் தம்மனைவி பிள்ளைகளோடு பட்டினியிருந்து மாய்கின்றான். இது இப்படியிருக்க, தன் பொருளனைத்தையும் திருடரால் இழந்தவனோ, சில நாண் மாத்திரம் கவலையுற்றுப்பின்பு அக்கவலையை ஒழித்துவிட்டுத் தன்னால் இயன்ற தொழில்செய்து மகிழ்ச்சியோடு சீவனஞ் செய்கின்றான். ஆதலினாலே, ஒருவனுடைய பொருண் முழுதையும் திருடுதலினும், அதன் பொருளிற் சிறிதையேனும் கடனாக வாங்கிக்கொண்டு அதனைத் தீர்க்காமை பெருங்கொடும் பாவம் பாவம்.

நம்முடைய தேசத்தாருள்ளே கடன் படும் வழக்கம் மிகப்பெரிது. கடன்படாதவர் நூற்றுவருள்ளே ஒருவர் சிடைப்பதும் மிக அரிது அநேகர், சுபாசுப கருமங்களிலே பிறர் செலவுசெய்வதைப் பார்த்து, தாங்களும் அப்படியே செலவு செய்யாதொழிந்தால் தங்களுக்கு அவமானமாகும் என்று எண்ணி, கண்ணை மூடிக்கொண்டு, அகப்படுமட்டும் கடன்பட்டுச் செலவு செய்கின்றார்கள். கடன்பட்டு வட்டி வளர்ந்தபின்

முன்னுள்ளதும் இழந்து பசிநோயால் வருந்துதலும் கடனைத்தீர்க்க இயலாது தனிகர் குடியைக் கெடுத்தலும் அவமான மல்லவாம், வரவுக்கேற்ப மட்டாகச் செலவு செய்து முட்டின்றி வாழ்தல் அவமானமாம். ஐயையோ! இவர்கள் அறியாமை இருந்தபடி என்னை.

நம்முடைய தேசத்தார்கள் சுபாசுப கருமங்களிலே செல விடும் பொருள் பெரும்பாலும் யாவரிடத்தே சேர்கின்றது? தொழில்செய்து சீவனம்செய்யச் சக்தியுடையவர்களாய் இருந் தும் அது செய்யாத சோம்பேரிகளிடத்தன்றோ? யாசித்துப் பொருள் சம்பாதிக்கும் இச்சோம்பேரிகளுள்ளே அநேகர் உண்டு உடுத்தி, எஞ்சிய பொருள் கொண்டு ஆபரணஞ் செய்வித்து, வீடு கட்டுவித்து, விளைநிலம் தோட்ட முதலியவை வாங்கி நூற்றுக்கு இரண்டு மூன்று வீதம் வட்டிக்குக் கொடுத்துக்கொண்டு, செல்வர்களாய் இருக்கின்றார்களே. தொழில் செய்து வருந்திச் சம்பா திப்பவர்களுள்ளே அநேகர் சுபா சுப கருமங்களிலே இவர்களிடத் திலே கடன்பட்டு, இவர்களுக்கே இறைத்துவிட்டு, வட்டி வளர்ந்த பின், இவர்கள் தங்கள் வீட்டுவாயிலில் வந்து சிறிதும் கண்ணோட் டமின்றித் தங்களை வாயில் வந்தபடி பேச, அவமானமடைந்து தங்கள் தாவர சங்கமப்பொருளை விற்றுக்கொடுத்துவிட்டு, அன் னத்திற்கு அலைகின்றார்களே!

அநேகர் ஆபரணஞ் செய்வித்தற்கும், வண்டி குதிரை வாங்குவதற்கும், வீடு கட்டுவித்தற்கும், விளைநிலம் தோட்டம் முதலியவை வாங்குவதற்கும், கடன் படுகிறார்கள். வட்டி வளர்ந்தபின் கடன் தீர்க்கப் பிறிது வழி இன்மையால், அவ்வா பரண முதலியவற்றை விற்கின்றார்கள்; அவைகள் வாங்கிய விலை க்கு விலைப்படுதலே அரிது. அப்படியாகவே, அவைகளின் விலைப் பொருள் வட்டிக்கும் முதலுக்கும் எப்படிப்போதும்! போதா மையால், தங்களிடத்து முன்னுள்ள தாவரசங்கமப் பொருளையும் விற்றுக் கொடுத்துவிட்டு, வறியவர்களாய் வருந்துகிறார்கள்.

கடன்பட்டு ஆபரணந்தரிப்போரும், வண்டி குதிரை ஏறு வோரும், பவனி வருவோரும் பிறர் பார்த்து இன்பம் அநுபவிக் கத் தாங்கள் தங்கள் கடனை நினைந்து நினைந்து நெஞ்சந் திடுக்குத்

திடுக்கெனப் பெருமூச்செறிந்து, துன்பமே அனுபவிக்கின்றார்கள் தாங்கள் துன்பக்கடலின் மூழ்கியும், பிறருக்கு இன்பத்தைக் கொடுக்கவும் இந்த டாம்பிகர்களுடைய சீவகாருணியத்தை யாது சொல்வோம்!

வாணிகஞ் செய்ய விரும்புவோர் இயன்றமட்டும் தங்கள் கைப்பொருளைக்கொண்டு வாணிகம் செய்வதே தகுதி. கைப் பொருளில்லாதவர் கடன் சொல்லி சரக்குகளை வாங்கி வாணிகஞ் செய்ய முயன்றால், கடன் கொடுப்பவன் வட்டிவாசிகளை அச்சரக்கின் விலையோடு சேர்ந்தே கொடுப்பான். ஆதலினாலே அவ் வாணிகம் தலையெடுக்காது.

கைப்பொருள் சிறிதும் இல்லாதவர், நிலத்திற்கென்றும், கலப்பைக்கென்றும், மாட்டுக்கென்றும், விதைக்கென்றும், இறைக் கென்றும் கடன்பட்டு பயிர்த்தொழில் செய்கின்றார்கள்: கடன் கொடுத்தவர்களெல்லாரும் அறுப்புக்காலத்தில் வந்திருந்துக் கொண்டு, ஒற்றைக்கு இரட்டியாக அளந்துகொண்டுபோகத் தாங் கள் போசனத்துக்கு முட்டுபட்டு வருந்துகின்றார்கள்.

கடனில் மூழ்கினவருள்ளே அனேகர், உத்தியோகத்தினாலே சீவிக்கப்புகுந்தும், தங்களுக்கு கிடைக்கும் வேதனத்தைத் தனிகர்கள் மாசந்தோறும் வந்து வட்டியின்பொருட்டு வாங்கிக் கொண்டு போய்விடத் தாங்கள் செலவிற்கு முட்டுப்படுகின்றார் கள். கடன் தீர்க்க வழியில்லாமையால் உத்தியோகத்தை விட்டு ஒளிந்துக்கொண்டு திரிவாரும், ஊரைவிட்டு ஓடிப்போவாரும் அநேகர். சிலர் இப்படிச் செய்வதற்குக் கூடாமையால், மன வருத்தத்தினாலே நாடோறும் சரீரமெலிந்து துயருறுகின்றார்கள்.

கடனுடையவர் சிலர் ஒரு தனிகனுக்குக் கொடுக்கவேண் டிய முதலையும் வட்டியையும் மற்றொரு தனிகனிடத்து வாங்கித் தீர்த்தும், சிலகாலஞ் சென்றபின் அக்கடனையும் அப்படியே மற் றொரு தனிகனிடத்தில் வாங்கித் தீர்த்தும், வருகின்றார்கள். இப் படியே கடன் விருத்தியாய்விட, முடிவிலே தங்கள் தாவரசங்கம பொருள்களெல்லாவற்றையும் விக்கிரயஞ்செய்து கொடுத்துவிட்டு வருத்தமடைகின்றார்கள். ஆதியிலே வட்டி வளர்ப்பதற்கு முன்

னரே, தங்கள் தாவர சங்கமப்பொருள்களிலே சிலவற்றை விற்று கடனைத்தீர்த்துவிட்டு எஞ்சிய பொருளைக்கொண்டு முட்டின்றிச் சீவிக்கலாமே. ஐயோ! இவர்கள் பேதமைக்கு யாது செய்யலாம்! பரிதாபம் பரிதாபம்!

கடன்படத் தலைப்படுவோர், தாம் கடன்படுதற்கு முன்பே "இப்போது நமக்கு இந்தப்பணத்தொகை ஆவசியகமா? இந்தக்கடனைத்தீர்த்தற்குப் பொருள்வரும் வழியுண்டா? பொருள் பிரைவில் வருமா? தாமதத்தில் வருமா? தாமதத்தில் வருமாயின், இதற்கு வட்டி வளர்ந்துவிடுமன்றோ? பொருள் வராதவிடத்து இக்கடனை தீர்க்கப்பிறிது வழியுண்டா? இப்பொழுது இப்பணத்தொகை ஆவசியகமேயாயினும், கடன் படாது. நம்முடைய தாவர சங்கமப்பொருளிலே சிலவற்றை விற்றே செலவு செய்யலாமே. இப்படிச் செய்தால் வட்டி மிஞ்சுமே! இப்படிச் செய்யாதொழிந்தால், வட்டி வளர்ந்தப்பின் நம்முடைய தாவர சங்கமப்பொருள் முற்றும் போய்விடுமே! அதன் பின்பு சீவனத்துக்கு யாது செய்யலாம்?" என்று இவைகளெல்லாவற்றையும் செவ்வையாக ஆலோசிக்கக் கடவர்.

அநேகர், பலர் குடியைக் கெடுத்துத் தாமே வாழ நினைந்து அவரிடத்தே கடன் வாங்கிக்கொண்டு, அவரை வஞ்சிக்கும் பொருட்டு, எல்லாப் பொருளையும், தங்கள் பந்துக்களுள்ளும், சிநேகருள்ளும் யாரையேனும் நம்பி அவரிடத்தே வைத்துவிட்டு, பின்பு தாம் அவராலே வஞ்சிக்கப்பட்டு, யாதொன்றும் பேசமாட்டாது ஏங்கி வருந்துகின்றார்கள். தாம் பிறரை வஞ்சித்தும், தம்மைப் பிறர் வஞ்சித்தும், தம்மை பிறர் வஞ்சியார் என்று நினைக்கும் பேதமையை யாது சொல்லலாம்! "நாமொன்றெண்ண தெய்வமொன்றெண்ணியது" என்னும் பழமொழியின் உண்மையை இவர்களிடத்தே காணலாம்.

அநேகர் தாங்கள் சிறிதும் கடன் படாதவர்களேயாயினும் கடன்படத் தலைப்பட்டுப் பிறர் பொருளை நம்பித் திரிகின்றவர்களோடு சினேகஞ்செய்து, அவர்கள் பொருட்டுப் பிணை நின்று, தங்கள் தாவரசங்கமப் பொருளெல்லாம் இழந்து, தங்கள் பெண்டிர் பிள்ளைகளாலும் அவமதிக்கப்பட்டு பசிநோயால் வருந்துகின்றார்கள்.

[தொடரும்]

வாழ்வின் வெற்றி.

சிறப்புற்றோங்கும் இப்பூவுலகின் கண்ணே தோற்றப் படும், சராசரப் பொருள்களனைத்தினும் உயிர்கள் முக்கியமென கருதப்படுகின்றன. உயிர்கள் பலவற்றுள்ளும் மேம்பாடுடையது மனித ஜென்மமேயாகும்.

கீழான ஜென்மங்கள் தங்கள் உடலை பேணுதற்கும், வர்க்க விர்த்திக்காக மட்டுமே முயல்கின்றன. ஆயின் மக்கள் வர்க்கமோ வென்றால் உலகத்தின் மகத்தான அரும்பெரும் காரியங்களை சாதிக்கவல்ல பொறுப்பேற்று முயல்கின்றன.

உலகத்து மக்களெல்லாம் வாழ்வெனும் உச்சஸ்தானத் தையே நாடி முயல்கின்றனர். ஆயினும் சிலர் வாழ்வுற்று மகிழ் கின்றனர். சிலர் தாழ்வுற்று தவிக்கின்றனர். பாரமார்த்திகப்படி இவ்வுலக வாழ்வு ஈஸ்வர சங்கல்பம். முன்னறிந்த அனுபவித்த நோக்கத்தையே மாறி மாறி கற்பிப்பதும் காலசக்கரத்தின் பல்லு களில் சிக்குண்டதாகவும் காணப்படுகின்றன

லௌகீகப்பாவப்படி:—இவ்வுலகத்து வாழ்வு முயற்சியென் னும் கரும்பின் சாற்றை யொத்திருக்கின்றது. கரும்பை ஆலையி லிட்டு ஆட்டிப்பிழிந்தாலொழிய இனிமை பெறுவது யாங்கனம்! "முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்" என்ற மூதுரையும், ஊழையுமுப்பக்கங்காண்பருலைவின்றி தாழாது ஞற்றுபவர் என் றும் "தெய்வத்தானாகாதெனினு முயற்சி தன் மெய்வருந்த கூலி தரும்" எனவகுத்த நமது தெய்வப் புலவரின் கருத்தை யூன்றி பார்ப்பாருக்கு மக்களின் ஊக்கமுடைமை எத்துணை சிறப்புற்ற தென நன்கு விளங்கும். பொதுப்பட கூறின் மக்களுக்கு முயற் சியே வேண்டிய ஆக்கம் தரக்கூடிய கைக்கருவியாகும்.

பாரமார்த்திகமாவது மக்கள் செய்யும் பெருமுயற்சியி னின்று தவறி விழுங்கால் மனதை புண்படுத்தி மாளாத சாந்தி பெருவதற்கும் மீண்டும் புத்துணர்ச்சி பெறுவதற்குரிய சமய கருவியாக கொள்ளலாமேயன்றி, மக்களுக்கு நற்காலமோ தூர்க் காலமோ சதாகாலமும் முயற்சியிலேயே சிந்தை செலுத்துதல் நல் வாழ்க்கை கோரும் மாந்தரின் பொதுக்கடமையாகும். மாடு மேய்ப்பவன்முதல் கம்பத்த தலைவர்மட்டும், தெருக்களில் தட்டு களேந்தி விற்கும் சிறிய வியாபாரி முதல், பெரிய கப்பல் வியா பாரிவரைக்கும், தோட்டிமுதல் தொண்டமான்மட்டும் செய்ய வேண்டிய முயற்சியினளவு ஒன்றேயாகும்.

சுக வாழ்வு.

உலகத்து ஒவ்வொரு உயிரும் ஆரோக்கிய வாழ்க்கையை யடையப் பெறுதலே மனித ஜென்மத்தின் முதற்பயனாக கருதப் படுகின்றது. அது தேக சுகம், மனோசுகமென இருபாற்பட்டது. சரீர வாழ்க்கை:— சரீர வாழ்க்கையே உலக வாழ்க்கைக்கு முதற்படி என்னலாம். சரீரத்தை தேகதத்துவ நூல்படி சுசியா கவும் அதனுருப்புகளை கூர்மையாகவும், திடமாகவும் வைத்திருத்தல் வேண்டும் ஆரோக்கியத்தைவிட ஒரு மனிதனுக்கு இவ்வுலகில் வேண்டற்பாலது யாதுள! தேக ஆரோக்கிய மில்லாது நோய் வாய்பட்டிருப்பின் இவ்வுலக சுகத்தை நீண்ட ஆயுளோடு அனுபவிக்க இயலாதவனாய் அல்லலுற்று அகாலமரணத்தை அடைய வேண்டியவனாகின்றான். ஆயிரமிருப்பினும் சுகமில்லா னுக்கு யாதுபயன்? ஆரோக்கியமில்லையேல் இறந்தார் பந்தியி லன்றோ வைத்தல்வேண்டும்! இதனால் நன்கு வாழவேண்டிய மக்கள் ஆரோக்கிய வழிகளை கற்றுணர்ந்தொழுகுவது சாலச் சிறந்தவற்றுள் முதலாகும்

மனோவாழ்க்கை:—சரீரசுகமே மனோசுகத்துக்கு முக லாதாரம். அதோடு நல்லொழுக்கம், சன்மார்க்கம் பக்தியும் சிறப் பாக விளங்கும். இவைகள் ஓர் உயிரின்கண் தோன்றாவிட்டால் சதா கலகம், சண்டை, மனக்குழப்பம் நேரிட்டு மனோ சுகமென்னும் பாதையைவிட்டு நழுவுகின்றான். எனவே மக்கள் சன்மார்க்கமென்னும் குளத்தில் மூழ்கி மன அழுக்கை கழுவி ஆத்மசுத்தம் பெறுதலே மாந்தரின் பிறவிக்கடனாகும்.

கல்வி (ஞானவாழ்க்கை)

கல்வியறிவினல் விசேஷ புத்தி சாதுர்ய முண்டாகிறது. நன்மை தீமைகளை மேலான நோக்கத்துடன் பாவித்துக்கொண்டு அடங்கி நடக்கும் தன்மை ஊறுகின்றது. மெய்யறிவாளிகள் மனித வர்க்கத்தின் அபிவிர்த்திக்கும் அவர்களின் க்ஷேமலாட களில் ஈடுபட்டு உழைக்கின்றனர். தாழ்ந்த அறிவினல் தந்நலங் கருதியுழைக்கின்ருர்கள். கல்வியின்மையினல் நன்மை, தீமை, சரி, தவறு முதலிய பாகுபாடுகளை பகுத்தறிய சத்தியற்று ஊனவாழ்விலீடுபடுகின்றனர். கல்வியினலேற்பட்ட புத்தி சாதுர்யங்களால் பிழைப்புக்கு ஆதாரத்தை தேடிக் கொள்கின்ற னர். ஒருவனுடைய அறிவு ஆயிரக்கணக்கான மக்களுக்கு பிழைப்புக்கு வழி தேடிவிடுகின்றது. மேல்நாட்டு ஆதிக்கத்துக்கு ஆதாரமாக விளங்கும் சாதனங்கள் இத்துறையில் பலவாம். அவை ரயில்வே, கப்பல், ஆகாய விமானம், மோட்டார், தந்தி, தபால், பேசும் சினிமாக்கள், கெடியாரம், பாடும் கிராமபோன் முதலிய ஆயிரக்கணக்கான நுட்ப இயந்திரங்களை கண்டுபிடித்தவர் ஒவ்வொரு ஆண்மகனுகும். ஓர் அறிவாளியால் கண்டுபிடித்த சூக்ஷம வித்தை பல்லாயிரம் மக்களுக்கு உயிரோம்புதலுக்கு ஜீவனேபாய மாயிருக்கின்றதல்லவா? உலகானுபவங்களை கவியாகத்திரட்டிய கம்பநாட்டாரதுகவிச் சுவை பல்லாயிரமக்களுக்கு சிந்தைக்கும், செவிக்கும், வாய்க்கும், இனிமையூற்றை யளிக்கவில்லையா? மகாத்மாகாந்தியடிகளின் பொருள் நூலின் சுவையைக்கேட்டு ஆனந்த மெய்தாதவர்கள் உலகத்து மக்களில் எவர்தானிருக் கின்றனர்? இவைகளெல்லாம் கல்வியனலடையப்பட்ட பெரும் பேருகளாகும். கல்வியே சிற்றுயிர்க்கு உற்றதுணை யென்பதை நாம் மறந்துவிட முடியாது.

பழக்கம் (அனுபோக வித்தை)

கல்விவாழ்க்கைக்குச் சமமாய் பழக்கவழக்கங்களைச் சொல்லலாம். சிறுபிராயமுதல் கல்வி நடையிலேயே இருப்ப வர்க்கு உலகநடை யிருக்கவே இருக்குமென்று கொள்வது ஒவ்வாது. சாமானிய புத்தியினுலும் அனுபவத்தினுலும் வெகுகாரி யங்கள் சாயும். இயற்கையறிவாலும் தக்காரைச் சேர்ந்து கைத்

தொழிலிலோ, வியாபாரத்திலோ, வேறு எத்துறையிலோ, அவரோடு பழகி வருகிறவர்கள் உலகத்தில் மகத்தான காரியங்களை இன்றைக்கும் சாதித்து வருகிறார்கள். "சுட்டிக்காட்டாத வித்தை குட்டுப்பட்டாலும் வராது" என்பது ஆன்றோர் வாக்கல்லவா? நீதியையும், உலகானுபவங்களையும் நன்குணர்ந்த அறிவாலும், சீலத்தாலும், காலத்தாலும் முதிர்ந்த பெரியோர்கள் இவர்களின் அடிச்சுவடுபற்றி அவர்களின் உபதேசத்தில் நின்று பழகுதல். இதனால் அறநீதிகளின் நெறிதவறாது நடத்தலும், கூடினவரைப் பிரித்தல் அல்லது வேறு பகை விளைவித்தலன்றி வற்றாறும், பகைவர் செய்யும் துன்பங்கள் பல திறத்தாலாகிய இன்னல்களையனுபவித்த முதியோர்களின் அனுபோக வாழ்க்கையே துன்பத்தை ஓட்டும் மருந்தாகக் கொள்ளவேண்டும். "இளமை பழக்கம் சுடுகாடு மட்டும்" என்றபடி இளமையிலேய பாதி பகலை கல்வியிலும், பாதி பகலை பழக்கத்திலும் கழித்து வருபவர்களுக்கு அனுபவ ஞானம் ஓர் மரக்கலத்தை யடைந்ததொக்கும்.

ஒத்த வாழ்க்கை.

மேலான பழக்கங்களில் தங்கள் வாழ்நாளைக்கழிப்பவர்க்கு ஒற்றுமையான குடும்பவாழ்க்கையவசியம். சுற்றத்தாரோடும், உலகத்தாரோடும் ஒன்றி வாழ்வது பூனைக்கும் நாயுக்கும் உள்ள சிநேகத்தின் கஷ்டத்தை யொத்ததானாலும், அப்படிப்பட்டத் துன்பக்கடலில் மூழ்கி எழுந்தவர்களிடத்தில் சாந்தம், பொறுப்புரிமை சகிப்புத்தன்மை, விட்டுகொடுக்கும் குணம் முதலியவை ததும்பி நிற்கும் "சேர்ந்து வாழ்வதே சிறந்த் வலிமை" என்றபடி குடும்பத்திலும், ஊரில் தனிப்பட்டவரிடமோ அல்லது சாதியிடமோ உள்ள பகையைக்கொண்டு ஊர் பொது நன்மைகளிலும் மனிதாபிவிர்த்தியின் கொள்கைகளிலும், நுழைந்துவிடாது ஆண்மைத்தனத்தோடு ஒன்றி வாழ்பவர்க்கு செல்வமும், சுகமும், காப்பும், பெருமையும் அடையப்பெருவார்களென்பதிலேய்யமில்லை தேங்காயுள்ளிருக்கும் பருப்பைஓடு மூடிக்கொண்டு காப்பதுபோல் ஒற்றுமை மனிதவாழ்க்கைக்கும், நாகரீகத்திற்கும் ஊனம் விளைவிக்காமைக்கு காப்பாகும்.

மேலான நாகரீகத்தை கடைப்பிடித்து அதில் தானும் தன் குடும்பமும் ஒன்றி வாழ்வதே உயர்ந்த உயிர்களின் நாகரீக வாழ்க்கையாகும். அவ்வப்போது நிகழும் காலப்போக்கிற்கும், தேசாச்சாரத்திற்கும் பொருளாதார நிலைமைக்கும் எற்றவாறு நாகரீக சாதனங்களில் தனது வருவாயுக்கும், குலத்திற்கும், தேயத்திற்கும் பாதகம் விளைவிக்காதபடி எம்மட்டு எற்றிநடக்க திறமையோ அவவழிகளில் தெளிந்து தேர்ந்து கொள்ளுவது அறிவுடைமையாகும்.

தற்கால நாகரீகத்திற்கும், முற்கால நாகரீகத்திற்கும் பெரிதும் தாரதம்மியமுண்டு. உயிர்களெல்லாம் முன்னேற்றமடையும் சந்தையில் அவரவர்கள் தங்களுக்கு எற்ற உபாயங்களிலெல்லாம் முயன்று பொருள்குவித்து நாகரீகஸ்தம்பத்தை கட்டிவைத்தார்கள். மகாத்மா காந்தியடிகள் தன் கைபலத்தாலும், தன் குடும்பத்தவரின் பலத்தாலும், தன் தேயத்தவரின் பலத்தாலு மட்டுமே நாகரீக ஸ்தம்பத்தை கட்டவேண்டுவது ஆண்மைத்தனமும், ஆத்திகமுமாகும் என பட்டவர்த்தனமாய் உலகருக்கு விளக்கிக்காட்டிவிட்டார். ஆகையால் இக்காலத்து நாகரீக சாதனங்களை எம்முறையில் அனுஷ்டிப்பதென்பதை நன்கு கற்றுணர வேண்டும்.

பக்தி வாழ்க்கை.

நாகரீகமும் ஆத்மசுத்தி பெற்றவர்க்கே இயற்கையான தெய்வபக்தி ஊறுகிறது. அநாகரீகமான மக்கள் செய்யும் பக்தி குளிக்கப்போயும் சேற்றை பூசிக்கொள்வதைப்போல் மூடபக்திக்குள் ஆளாகிறார்கள். ஆனால் இருபாலர்களின் பக்தியென்னும் உதயமொன்றுயிருந்தாலும் அவர்களின் உலக வாழ்க்கையின் வெற்றிகளில் பலன் உள்ளங்கை கனிபோல் காட்டிவிடும் என்பதில் சந்தேகமேயில்லை.

பகவானையோ பகவானின் பிரதிநிதிகளாகிய உயிர்களையோ பக்தி செய்துக் கொண்டிருப்பதுதான், இவ்வுலகத்தில் நித்திய அழியா வாழ்க்கை என்பதை மனிதர்கள் உணரும்பொருட்டே மனிதனை ஆண்டவன் படைத்துள்ளானென்பதை ஒருநாளும் மறக்கமுடியாது. இதைப்பற்றியன்றோ பக்திசெய்துக்

கொண்டிருந்தால் முக்திபெறலாமென்னும் சான்றோர் வாக்கு ஒன்றுளது. பக்திதான் மக்களுக்கு முடிவான நிலையென்பதை உணரக்கூடாதவர்கள் உலகத்தில் மனிதன் வெற்றிபெறவேண்டிய எல்லா நோக்கங்களிலும் முயன்று முயன்று முடியாது தனது ஆசைப்பட்டுவீழ்க்கும் வேளையில்தான் பக்தியின் இனிமையை ருசிக்க ஆரம்பிக்கிறான். தெய்வபயமே பக்தியின் முளையாகிறது தெய்வ பய மின்மையே பக்தியின் மரமாகிறது. உயிர்களுக்கு செய்யும் தொண்டே தெய்வத்தொண்டாகுமென்பதை பக்தியில் ஈடுபடும் மக்கள் உய்த்துணரல் வேண்டும்.

சமய வாழ்க்கை.

தத்தேக சம்ருஷ்டி சம்பந்தமாகவும் குடும்பம் சுற்றத்தார் ஜாதி (Society) சம்பந்தமாகவுமேற்பட்டுள்ள தர்ம நீதிகளையும், பழக்க வொழுக்கங்களையும், நாகரீகத்தையும் படிப்படியாய் முன்னேற்ற மடைவதற்குறிய கட்டுப்பாடான நிபந்தனைகளோடு நடத்தலும் சாதிச்சமய ஊழள்களாயுள்ளவற்றைக் கடத்தலும் சமய வாழ்க்கை எனப்படும்.

அஃது திரேகசுத்தம், மனோசுத்தம் ஜீவர்களிடத்திலன்பு, சகிப்புத்தன்மை, அஹிம்ஸை, அனுபோகஜீவியம் முதலியவைகள் தாம் இத்தேயத்தின் பலசமய மூலக்கொள்கைகள். இவைகளை பூர்த்திசெய்து காட்டுவதற்கு பரிபக்குவமில்லாத தாழ்ந்த சக்தியுள்ள பலமக்களும் உயர்ந்த சக்திவாய்ந்த பலபெரியாரும் வதிகின்றனர். இப்படிப்பட்ட தாரதம்மியமுள்ள மனோபாவத்தால் தான் முற்காலத்தில் ஜாதிகள் பிரிக்கப்பட்டிருக்கின்றன. இக்காலத்து மேனாட்டு கூட்டுறவால் அவைசங்கம் கூட்டம், சபைகளின் மூலமாய் உலக சமயவாழ்க்கையை ஆராய்ந்து தக்கதிது, தகாததிதுவென ஓர்ந்து வாழ்க்கையை நடத்த மக்கள் கடமைப்பட்டுள்ளார்கள். சமயவாழ்க்கையின் உட்கருத்து பிறர் வாழ்விற்கும் முன்னேற்றத்திற்கும் இன்னாசெய்யாமையுமாகும்.

சமூக வாழ்க்கை

கிராமத்திலுள்ள மக்கள் தேசமக்கள் ஒன்றுபட்டு வாழ்வதற்குரிய சமய சமுதாய அரசியல் விஷயங்களாகும் இது.

மூன்று வகைப்படும். கிராமவாழ்க்கை, நாட்டுவாழ்க்கை, உலகவாழ்க்கையென முப்பாற்பட்டதாகும். கிராம அபிவிர்த்தி, அலங்காரம், உயிர்வாழ்க்கைக்குற்றசாதனங்களை கவனிப்பதும், பலதிரப்பட்ட மக்களுக்குளேற்படும் பிணக்குகளை சமரஸப் படுத்துவதும், தர்ம நிலைப்படி விதிவிலக்குகளை திட்டமாக்கி உலகானுபவங்களோடு ஒத்திட்டு சமய சமூகம் அரசியல் என்றுள்ள மூன்று துறைகளையும் சீர்திருத்தம்செய்து அதன்படி நடக்குமாறு சமரஸ முறையில் நடு நாயகமாக விளங்குவதே சமூக வாழ்க்கைக்கும் ஒற்றுமைக்கும் முரணுயுள்ள, சமயஊழல்கள், தீண்டாமை, அஹிம்ஸை, முதலியவைகளை நீக்க முயலுதலும், நாட்டுப் பற்றை மக்களிடை யுண்டுபண்ணலும் சமூகத்தலைவர்களின் கடமைகளாயிருக்கின்றன.

அரசியல் வாழ்க்கை

சமூகத்தவரால் செய்ய இயலாத நிர்மாண வேலைகளைச் செய்தலும், சமூகத்தவரின் கட்டுக்கடங்காத விவகாரங்களை பைசல் செய்தலும், தர்மஸ்தாபனங்களை காத்தலும் அதர்மஸ்தாபனங்களை அழித்தலும், மக்களின் செல்வநிலமைக்கு பொருளீதலும், காத்தலும், நாகரீகத்தை வளர்த்தலும் அரசியல் வாழ்க்கையின் நோக்கமாகும் சமூகத்தலைவர்கள் மக்களோடு ஒன்றுபட்டு கலந்தாலோசித்து ஏற்படுத்தும் விதிகளின் ஆலோசனையை ஏற்று சட்டமாக்கி நடத்தல் ஆள்வோரின் கடமையெனப்படும்.

பிராமண வாழ்க்கை

பொதுஜன வாழ்க்கைக்காக கைம்மாறு கருதாது உழைத்தல் மக்களின் தர்மநிலைகளையும் அரசாங்கத்தாரால் ஏற்படுத்தும் சட்டங்கள் ஒழுங்காக நடைபெறவேண்டி தளராது உடல்பொருள் ஆவி மூன்றையும் தத்தம் செய்ய தக்கவர்கள். இவர்கள் தேசாபிமானிகளென்றும், இருடிகள், பிராமணர்களென்றும், அழைக்கப்படுகின்றனர். இவர்கள் சமயத்தை தூய்மை படுத்துவோரும், சமூகத்தை தூய்மை படுத்துவோரும், அரசியலை தூய்மைபடுத்துவோருமாக நிலவுகின்றனர். சமயம், சமூகம், அரசியல் என மூவ்வழிகளாலும் செய்து முடிக்க

இயலாத உன்னத காரியங்களை முடிப்பவர்களே பிராமணர்கள், மகாத்மாக்கள், பெரியார்கள் என்று கருதப்படுகின்றனர்.

எனவே ஒவ்வொரு மனிதன் வாழ்வின் வெற்றியானது ஆரோக்கியமென்னும் பொக்கிஷத்தை எடுத்துக்கொண்டு கல்வியை துணைக்கொண்டு அனுபவமென்னும் மரக்கலமேறி ஒற்றுமையென்னும் கதவுளால் பூட்டிக்கொண்டு நாகரீகமென்னும் கொடிமரம் போட்டு, பக்தியென்னும் நீராவி என்ஜினை முடிக்கிவிட்டு, உலகதுன்பமென்னும் ஆழியைகடந்து, சமயமென்னும் தீவிலிறங்கி, சமூகமென்னும் வியாபாரத்தைசெய்து, அரசியல் அரண்களால் காப்பாற்றி, பொதுநல வாழ்க்கையென்னும் ஊதிய சங்கமெடுத்தாதுவதைப் போன்ற அதைதுணை மிக்க கொடிய பிரயாசையும் விடாமுயற்சியையும் பொருத்திருக்கின்றன. மக்கள் வாழ்வின் உன்னத சிகரத்திலேறுவதற்கு முற்கூறிய பலவித வசதிகளையும் பெற்று வாழ்க்கை நடத்துதலே மக்கள் பிறவிக்கு காரண காரியங்களாயுள்ளன வென்பதை மறவாதிருத்தல் வேண்டும்.

நமது மன்னர்.

5-வது ஜார்ஜ் மன்னரின் இரண்டாவது பிள்ளையும் இதுவரை டியூக் ஆப்யார்க் என்ற பெயருடனிருந்து வந்தவரும் இப்போது 6-வது ஜார்ஜ் என்ற பெயருடன் பட்டத்துக்கு வந்திருப்பவருமான புதிய மன்னர் 1895 டிசம்பர் 14-ந்தேதி பிறந்தார். அவர் ஆரம்பத்தில் கப்பல் படையில் பயிற்சிபெற்று 1913-ம் மிட்ஷிப்மன் என்ற உத்தியோகம் பெற்றூர். யுத்தகாலத்தில் முதலில் கடற்படையிலும் பிறகு ஆகாயப்படையிலும் சேவை செய்தார். யுத்தம் முடிந்தபின் கேம்பிரிட்ஜ் ஸர்வகலாசாலையில் சேர்ந்து படித்தார். 1920-ம் வருஷம் ஜூன் மாதம் அவர்டியூக் ஆப்யார்க் என்ற பட்டமளிக்கப்பட்டார். 1921-ல் கடற்படைத் தலைவர் பதவிக்கு உயர்த்தப்பட்டார்.

1923 எப்ரல் 26-ந்தேதி அவருக்கும் லேடி எலிஸ்பெத் போஸ்லியானுக்கும் கல்யாணம் நடந்தது. இவர் ஏர்ல் ஆப்ஸ்டிராத்மூரின் குமாரி. பின்னர் பிரதிநிதியாக அவர் பலஐரோப்பிய

தேசங்களிலும் முக்கிய கொண்டாட்டங்களில் கலந்துக்கொண்டிருக்கிறார். 1925ல் அவர் வெம்பிளிக் காட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பிரிவி கவுன்சில் மெம்பராயும் நியமிக்கப்பட்டார்.

1926 எப்ரல் 12-ந்தேதி எலிஸபெத் அலெக்சாண்டிரா மேரி என்ற ராஜகுமாரி யார்க்கு கோமகனுக்கு முதற் குழந்தையாய் பிறந்தாள்.

ஆஸ்திரேலியாவின் புதிய தலைநகரமான கால்பராவின் நடந்த கொண்டாட்டங்களுக்கு யார்க்கு கோமகனும், சீமாட்டியும் 1927 ஜனவரியில் புறப்பட்டுச் சென்றனர். 1928 டிசம்பரில் ஜார்ஜ் மன்னர் தேக அசௌக்கிய காலத்தில் இவர் ஸ்டேட் கவுன்சில் மெம்பராயிருந்தார். மார்க்கெட் ரோஸ் என்ற இரண்டாவது ராஜகுமாரி 1930 ஆகஸ்டு 21ந்தேதி பிறந்தாள்.

1936ல் இவர் ராணுவத்திலும், கடற்படையிலும். பல உயர் பதவிகளுக்கு நியமிக்கப்பட்டார்.

மகாத்மாவின் மணிவாசகம்.

கிராம சேவை.

கிராம சேவையில் ஈடுபடுகிறவன் காங்கரஸ் மகாசபையின் அங்கத்தினனாயிருக்கலாம்; ஆனால் தேர்தல் விவகாரங்களில் தலையிடலாகாது; கிராமத்திலுள்ள கட்சி விவகாரங்களிலும தலையிடக்கூடாது. அவன் கிராமவாசிகளுக்கிடையே தங்கவேண்டும்; சாதாரணமான கிராமவாசி வாழ்க்கை நடத்துவதைப் போலவே தானும் வாழ்க்கை நடத்த வேண்டும் வஞ்சகவலையில் விழக்கூடாது, தவறான வழிகளில் செல்லக்கூடாது, தான் வசிக்கும் கிராமத்தையும் தவறான வழிகளில் செல்லாமற் காப்பாற்றவேண்டும்.

சுத்தமான வாழ்க்கை நடத்தும் ஒரு மனிதன் கூட ஒரு கிராமத்தைக் காப்பாற்றக்கூடும். ஒரு விபீஷணன் இலங்கையைக் காப்பாற்றவில்லையா?

சத்தியத்தை ஒருபோதும் கைவிடலாகாது தன்னைக் காப்பாற்றிக் கொள்ளும் பொருட்டு உண்மையைக் கைவிடுவதைக் காட்டிலும் இந்தியாவே அழிந்து போகலாம்.

கீதையும் பிரமசரிய விரதமும்.

போதுமான வைராக்கியத்தோடு ஒவ்வொரு பிரசினையையும் கவனிக்கவேண்டும் பதற்றம் ஆத்திரம் முதலான இருதய, உணர்ச்சிகளோடு குழப்பி விஷயப் பரிசீலனைகள் செய்வதாக நரம்புகள் பாதிக்கப்படும். உள்ளத்தையும் உடம்பையும் பாதிக்கக்கூடிய நிலையில் கவலை முதலான உணர்ச்சிகளோடு கர்மம் செய்யக்கூடாதென்று கீதை வற்புறுத்துகிறது.

சரியானபடி வாழ்க்கை நடத்துகிறவர்களுக்கு ஒருபோதும் உள்ளத்தில் கிழத்தனம் ஏற்படாது ஆரோக்கிய நிலையிலிருக்கும் ஒரு விருட்சத்தின் இலைகள் நாளடைவில் வாடிப்போவது போல் உடம்பும் அவர்களுடைய கிழத்தனம் அடையும் ஆனால் மனம் எப்போதும் இளமையாகவே இருக்கும். இப்படிப்பட்ட நிலையில் பீஷ்மர் வாழ்ந்திருக்கவேண்டும். அதனால்தான் அவர் மரணப் படுக்கையில் இருந்துகொண்டே தருமபுத்திரருக்கு விசேஷமான உபதேசங்களைச் செய்தார்.

1899-ம் வருஷம் முதல் நான் பிரமசரிய விரதத்தை அனுஷ்டிக்க முயன்று வருகிறேன். பிரமசரியம் என்பதற்கு மன மெய் மொழிகளில் சுத்தமாயிருப்பது என்று பொருள் கொள்கிறேன். சென்ற 36 வருஷங்களுக்கு மேலாக நான் அடைந்திருக்கும் அனுபவத்தில் ஒரே ஒரு சமயம் தான் என் பிரமசரிய விரதத்திற்குப் பங்கம் ஏற்பட்டது சமீபத்தில் நோயுற்றிருந்து வைத்திய நண்பர்கள் சொற்படி ஓய்வு எடுத்துக் கொண்டிருந்த காலத்திலும், உள்ளத்தில் சில தொந்தரவுகள் ஏற்பட்டன இதனால் என்னை நானே வெறுத்துக் கொள்ளலானேன். அருகேயிருந்தவர்களிடம் என் நிலைமையைக் குறித்துப் பிரஸ்தாபித்தேன். அவர்களால் எனக்கு ஒரு விதமான உதவியும் செய்ய முடியவில்லை; நான் அவர்களிடம் உதவியொன்றும் எதிர்பார்க்கவுமில்லை. எனினும் உண்மையான நிலையை ஒப்புக்கொண்டதால்

எனக்குப் பெரிதும் ஆறுதல் ஏற்பட்டது. ஒரு பெரிய சுமை இருதயத்திலிருந்து நீங்கியது போலிருந்தது. நான் அபாயத்தினின்றும் தப்பினேன்.

கீதையின் உபதேசம் தெளிவாயிருக்கிறது. ஈச்வரனை லட்சியமாகக் கொண்டு அந்த லட்சியத்தோடு ஒன்றுபடும் உள்ளம் நெறிதவறுவதில்லை. நான் ஈச்வரனிடத்திலிருந்து எவ்வளவு தூரம் விலகியிருந்தேன் என்பது அவருக்குத்தான் தெரியும். ஜனங்கள் மகாத்மா என்று அழைத்த போதிலும் நான் என்னை ஒரு போதும் ஏமாற்றிக் கொண்டதில்லை. சமீபத்தில் கிடைத்த அனுபவம் என் குறைகளை வெளிப்படுத்தி விசேஷமான பணிவை எனக்குக் கற்பித்துவிட்டது. அப்படிப்பட்ட அனுபவத்தைக் குறித்து நான் வெட்கப்பட்ட போதிலும் அதைப் பொது ஜனங்களுக்குத் தெரியாமல் மறைத்து வைக்கமாட்டேன்; அப்படி மறைப்பது மிகவும் வெட்கமான காரியம்.

கீதையின் உபதேசங்களில் எனக்கு நம்பிக்கை முன் போல் அதிகமாகவே யிருக்கிறது. இந்த நம்பிக்கை அனுஷ்டானத்திற்கு வரவேண்டுமென்றால்; இடைவிடாத முயற்சி அல்லது சாதனம் இன்றியமையாதது; முயற்சியோடு ஈஸ்வர கிருபையும் வேண்டுமென்று பகவத் கீதை சொல்லுகிறது. ஈச்வரன் இப்படி ஏற்படுத்தியிராவிட்டால் நாம் எவ்வளவு செருக்குள்ளவர்களாக இருப்போம்.

தீண்டாமை விலக்கு.

ஹரி ஜனங்களுக்கு பண உதவி செய்வது மட்டும் போதாது. ஹரிஜன சேவையின் நோக்கம் அவர்கள் தாழ்ந்ததற்குக் காரணமாயிருந்த ஜாதியாரின் ஆத்மசுத்தியாக இருக்கவேண்டும். நாம் அவர்களுக்கு உதவி செய்வதோடு அவர்களுக்காகக் கஷ்டப் படவும் தயாராயிருக்கவேண்டும்.

தீண்டாமை எதிர்ப்பு ராஜீய சம்பந்தமான விஷயமன்று. ஹரிஜனங்களின் பொருளாதார அபி விருத்திமட்டும் இந்த இயக்கத்தின் நோக்கமன்று; சமூக பொருளாதார-அரசியல் முன்னேற்றம் ஹரி ஜனங்கள் அடைய வேண்டியதுதான்; அதற்காக

நாம் பாடுபடவேண்டியதுதான்; எனினும் நம்முடைய முடிவான லட்சியம் வேறு இந்து மதத்திற்கு தீண்டாமை ஒரு கறை தீரவேண்டும். அதை எவ்விதத்திலும் போக்கியே தீரவேண்டும். தீண்டாமையை ஆலகால விஷமென்றே சொல்லவேண்டும். அதை ஒழிக்காவிட்டால், அது இந்து மதத்தை ஒழித்துவிடும் எனவே, இந்த நோக்கத்தோடு தீண்டாமையை ஒழிக்க முயல்வதுதான் நமது உண்மையான— முடிவான லட்சியமாயிருக்கவேண்டும்.

தீண்டாமையால் இந்து மதம் மெள்ள மெள்ள அழிந்து வருவதைப் பார்க்கிறேன். இப்போது இந்த அழிவு மெதுவாக நடக்கிறது. ஆனால் இது திடீரென்றுவெகு விரைவாக ஏற்படக் கூடும் அப்போது எந்த முயற்சியும் அழிவை நிறுத்தமுடியாமல் போய்விடும்.

உலகத்திலுள்ள எந்த வேதங்களிலும்—எந்த ஜனங்களுக் குள்ளும் (இந்துக்கள் தவிர) தீண்டாமை போன்ற ஒன்றைக்காண முடியாது. இந்து மதத்திற்குத்தான் தீண்டாமை பிரத்தியேக மாயிருக்கிறது. ஆனால் பிறப்பினால் தீண்டாமை உண்டென் பதற்குச் சாஸ்திர ஆதாரமோ, தக்க காரணமோ, காட்டமுடி யாது

தீண்டாமையை ஒழிக்க என்ன செய்யவேண்டும்? உற் சாகமாக ஹரிஜனங்களில் ஒருவனைத் தழுவிக்கொண்டு பிறகு மறந்துவிடுவது போதாது. நாள்தோறும் ஹரிஜனச் சேரிகளு க்குச்சென்று பல ஹரிஜனங்களைத் தொட்டுவருவதும் போதாது. தீண்டாமை - எதிர்ப்பு விஷயமாக ஒவ்வொரு நாளும் உங்கள் நடத்தை அபிவிருத்தி யடைந்து வரவேண்டும். அதிலிருந்து தங்களுக்கு நல்ல காலம் வந்துவிட்டது என்பதை நீங்கள் சந்திக் கும் ஹரிஜனங்கள் தெளிவாக உணர்ந்துகொள்ளவேண்டும்.

நீங்கள் கோவிலுக்குப் போகும் வழக்கம் உடையவர் களாயிருந்தால், ஹரிஜன நண்பர்களையும் கூட அழைத்துச் செல் லவேண்டும். அவர்களை கோவிலுக்குள் அனுமதிக்க மாட்டார்க ளென்பதை உணர்ந்தால், நீங்களும் அந்தக் கோவிலுக்குள் போ காகாமல் திரும்பிவிடவேண்டும். அப்படிப்பட்ட கோவில்களில் தெய்வம் இருக்கமுடியுமா ?

இந்துக்களுக்கு மகத்தான கோவில் காசி விச்வேச்வரர் கோவில் அந்தக் கடவுளை விச்வேச்வரர் என்றும் விச்வநாதர் என்றும் சொல்லுகிறோம். அவர் உலகத்திற்கே உரிய கடவுள், என்பது அந்தச் சொற்களின் பொருள். உலகத்தின் கடவுள், வசிக்கும் அந்த இடத்திற்குள்ளே ஹரிஜனங்கள் வரக்கூடாதெ ன்று இந்துக்கள் சொல்லுகிறார்களே ஹரிஜனங்களில் ஒருவன் போகக்கூடாதென்று தடுக்கப்பட்டாலுங்கூட அந்தக் கோவிலில் காசி விச்வநாதன் இல்லையென்று நான் சொல்லுகிறேன். ஹரி ஜனங்களைக் கண்டு கதவடைக்கும் மற்றக் கோவில்களிலும் கட வுள் இல்லை

ஆலயப்பிரவேச விஷயத்தில் ஹரிஜனங்களுக்கே சிரத்தை யில்லையென்று சிலர் வாதிக்கிறார்கள். சமூக அந்தஸ்திலும் அர சியல் பொருளாதார அபிவிருத்தியிலும் அவர்களுக்குள்ள சிரத் தை ஆலயப் பிரவேச விஷயத்தில் அவர்களிடம் காணப்படாம லிருப்பதற்குக்கூட நாமே பொருப்பாளி என்று உணர்ந்து கொள்ளவேண்டும். நம்முடன் கலந்திருந்து நமது கோவில் களில் கடவுள் வழிபாடு செய்யும் விருப்பத்தையும் அவர்களுக்கு நாமே உண்டாக்கவேண்டும்

கடவுள் அந்தர்யாமி— அதாவது, எங்கும் இருப்பவர். இந்துக்களின் கடவுள் தான் கிறிஸ்தவர் கடவுள்; இஸ்லாமியர் கடவுள்; எல்லாவித வகுப்பினர்க்கும் கடவுள். இப்படிப்பட்ட கொள்கையை உடைய இந்துமதக் கோவில்கள் ஹரிஜனங்க ளுக்கு இல்லையென்று கற்பிக்கப்பட்டிருப்பதால், அவர்கள் அலட் சியமாயிருக்கக் கூடும். எனவே அவர்களுடைய அலட்சியத்திற் காக நாம் அவர்களைக் குறை கூற முடியாது.

என்ன பலன் ஏற்பட்டாலும் ஏற்படாவிட்டாலும் சரி; தீண்டாமையை ஒழியுங்கள். ஹரிஜனங்கள் குழப்பழக்கத்தை நிறுத்திவிட்டால்,—செத்த மிருகங்களின் மாமிசம் சாப்பிடுவதை விட்டுவிட்டால்,—அழுக்காக இருப்பவை நீக்கிவிட்டால் 'தீண் டாமை ஒழிப்போம்!' என்று 'ஜாதி இந்துக்கள்' 'மேல்ஜாதி' என்ற மேடையிலிருந்து சொல்லும்போது, நான் மிகவும் அமைதி யற்றவனாகிவிடுகிறேன். எனது தகப்பனோ, தாயோ, எனது

மகனே, மகளோ ஒரு குஷ்டரோகி என்று வைத்துக்கொண்டால், அப்போது அவனோ அவளோ குஷ்டத்தை ஒழித்துவிட்டால் தான் 'தொடுவேன்!' என்று நாம் சொல்லமுடியுமா? ஹரிஜனங் களின் நிலைமை இன்னும் மோசமானது. அவர்கள் அடைந்திருக் கும் நிலைமைக்கு நாமே பொறுப்பல்லவா? குடிப்பது, செத்துப் போன பிராணிகளின் மாமிசத்தைச் சாப்பிடுவது, மற்றுமுள்ள அசுசியான நடத்தைகள்-இவையெல்லாம் நமது தவறுதல்களி னால்தான் அவர்களுக்கு ஏற்பட்டன. இந்தக் குறைகளுக்கு நேரடியான பொறுப்பு நம்முடையதுதானே;

என்னைப்போல் நீங்களும் ஹரிஜனங்களைச் சகோதரர்க ளாகப் பாவித்து நடந்து வந்தால், அப்போது அவர்களும் தங் கள் பழக்கங்களை மாற்றிக்கொள்வார்கள் என்று நம்புகிறேன் இந்தத் துறையில் அனுபவமுள்ளவர்கள் என் அபிப்பிராயத்தை உறுதிப் படுத்துவார்கள்.

ஜாதி இந்துக்களே! முதலில் உங்கள் இருதயத்தைப் பரி சுத்தப்படுத்திக்கொண்டு ஹரிஜனங்களிடம் வாருங்கள்; பிறகு அவர்களுடைய அசுத்தமான பழக்கவழக்கங்களை மாற்றி அவர் களையும் சுத்தப்படுத்திக்கொள்ள முயற்சி செய்யலாம்.

'ஜாதி' இந்துக்கள் சுவீகரித்துக்கொண்ட ஹரிஜனங்க ளில் ஒருவனாவது திருந்தாமலிருந்ததாக எனக்குத் தெரியவில்லை. உண்மையும் வேறுவிதமாக இருக்க முடியாது. வழக்க ஒழுக்கங் களில் மாற்றம் செய்துகொள்வது உண்மையில் நல்லது என்பதை அப்படிப்பட்ட பழக்கங்களிலிருந்துதான் ஹரிஜனங்கள் உணர்ந்து கொள்ள முடியும். தன்னைச் சுற்றிலுமுள்ள நிலைமைகளைக் கண்டு கண்டு, அவர்கள் குடிப் பழககத்தையும், செத்த மிருகங் களின் மாமிசம் சாப்பிடும் வழக்கத்தையும் விட்டொழிப்பார்கள்.

'அவர்கள் சுத்தமாகவேண்டும்!' என்று சொல்லிக் கொண்டிருப்பதால்மட்டும் பயனில்லை. ஒருவன் சுத்தமாக இருப் பது அவனுக்குக் கிடைக்கும் வசதிகளைப் பொறுத்திருக்கிற தல்லவா? அப்படிப்பட்ட வசதிகளை நாம் அவர்களுக்கு அளிக்க வேண்டும்.

ஓம் சுத்த சக்தி

சமரஸ விண்ணப்பம்.

சுவாமி சுத்தானந்த பாரதியார்.

உடலமே கோயிலாக,
  சந்நிதி யுள்ளமாக,
கடவுள் சுத்தான்மாவாகக்,
  கருதலே வழிபாடாக,
திடம்பெறும் அன்பே பூவாய்,
  தெள்ளறிவே விளக்காய்,
அடங்கிய மோனத்தாலே,
  யாவரும் பூசை செய்வோம்! 1.

வீணான சடங்குகளைப் பெருக்கவேண்டாம்,
  வெவ்வேறு சாமிகளை வணங்கவேண்டாம்,
மாணாக்கன் குருவென்று மடங்கள் கட்டி,
  மடிசஞ்சி யாசாரச்சண்டை வேண்டாம்!
ஆணுக்கும், பெண்ணுக்கும், அடிகளுக்கும்,
  அகில சரா சரங்களுக்கும் பொதுவாயுள்ளே,
காணுஞ் சுத்தான்மாவிற் கலந்திருப்போம்,
  கலையறக் கலகமறக் களித்து வாழ்வோம்! 2.

அன்புரைத்துச்சிலுவையிலே மறித்தேதன் பேரால்
  அபிமானி மதம்புனைந்து சர்ச்சுக்கட்டி,
தன்சமயம் பெரிதென்னத் தமுக்கடித்துச்
  சண்டைகளால் மண்டையுடைகின்றான் சாணீ!
நன் மறைகள் சொல்லான்ம நெறியைவிட்டு
  நாற்சாதி நாற்பதினாயிரம் வகுப்பாய்,
இன்பவழி தெரியாமல் இந்தியர்கள்
  இருளடிமைக் காளானார் எண்ணிப்பாரே! 3

அழுத்தமாய்ச் சொல்லுகிறேன் அன்பே கேளாய்!
ஆத்மாவில் ஒன்றுபடவேண்டும்; மாந்த
எழுத்தாலும் வாயாலும் பன்மை பேசி
எள்ளை மலையாக்கி இனம்பிரித்துப் போர்செய்
கொழுத்தமத சாதியுணர் வொழியவேண்டும்;
குலமொன்றாய் மாந்தரெலாம் வாழவேண்டும்;
செழித்த தொழிலறிவருளுந் திறனும், வீர
தீரர்களாய் அன்பரெலாந் திகழவேண்டும்.! 4

நன்கறிவீர்: அன்பர்களே! எனைமறப்பீர்!
நயந்துரைத்த பொதுவுண்மை போற்றி வாழீர்!
என்சமயம் உன்சமயம் என்னும் பேதம்
இனிவேண்டாம்; எல்லோரும் இணைந்து வாழும்
அன்புநெறி யான்மநெறி தூய வுள்ளத்
தமர்ந்த சுடர் வழி சென்றே யகிலமெல்லாம்
இன்புறலாம்; அனுபவித்தே இயம்புகின்றேன்;
இதுவே என் பணிவாகும் இனியீர் கேண்மின்! 5

கவிபாட வரவில்லை; காயிதத்தைக்
கருப்பாக்க வரவில்லை; மேடையேறிச்
செவிகுளிரப்பேசிடவும் அல்ல; வேறு
சித்துகளால் புகழ்பெறவும் இல்லை; மோனத்
தவத்திலே நின்றுதித்த சத்தியத்தைத்
தம்பட்டமில்லாமல், அன்பர் மூலம்
புவியினுக்குத் தருவதென் பணியாம்! மற்றப்
புலமையெலாம் அதன்மேலே பூச்சுத்தானே! 7.

வெறுப்பார்கள் வெறுத்திடினும் வெருவேன். மாய
வெம்பகைவர் சினந்திடினும் புன்னகைப்பேன்.
ஒறுப்பார்கள் ஒறுத்திடினும் பொறுத்துக்கொள்வேன்
ஊர்வம்பு நகைத்திடினும் ஒன்றும் பேசேன்.
செருப்பாலே யடித்தாலும் பெற்றுக்கொண்டு,
தேனமுதத் தமிழுய்ய வுயிர்கொடுப்பேன்!
ஒருக்காலுங் கொண்டகொள்கை யுதறமாட்டேன்!
ஓம் சுத்த சத்தி துணை நம்பினேனே! லக்ஷ்மி.

மும்மணிக்கோர்வை.

கிறிஸ்துமதத்தில் ஒவ்வொரு ஜீவனின் மகிமையும், அது உஜ்ஜீவிக்கத்தக்க சுதந்தர்யத்தையுடையது, என்ற தத்துவத்தை வற்புறுத்துகின்றது.

மகம்மதுமதத்தின் முழுகொள்கைகளும் இந்த மனித சுதந்தரத்தை வெளிப்படையாய் காட்டியிருப்பது மல்லாமல் அநுபோகத்திலும் வீழ்ந்து கிடக்கின்றது.

இந்துமதத்தில் எல்லா ஜீவர்களும் பொது ஸமஷ்டியில் ஈஸ்வரனுடைய அம்ஸமென்று கூறுகின்றது.

கிறிஸ்து மதக்கொள்கைகள் ஜீவன் மானிடவர்க்கத்தில் எவ்வித அற்பநிலையை யடைந்திருந்தாலும் அவன் தனக்குரிய ஸ்வதந்தரங்களை யடையுமாறு அவனை கைதூக்கி விடவேண்டியது பிறர் கடமை யென்றும், அதற்குரிய முயற்சிகளை மேலோர்கள் (பிராம்மணர்கள்) கைக்கொள்ள வேண்டுவது முக்கியமென்பதும் அம்மதத்தின் உத்தம கொள்கையாகும். பாவம் செய்கிறவர்களை அவர்கள் தள்ளி விடுவதில்லை. கிறிஸ்து மதம் பரவும் பிரதேசங்களில் அவர்கள் தத்துவ சாஸ்த்ரங்களை போதிப்பதிலாவது, கற்பதிலாவது விசேஷமாய் முயற்சிக்கிறதில்லை. கிறிஸ்து மதம் பரவும் பிரதேசங்களில் லௌகீக வித்தைகளை கற்பிக்கும் பள்ளிக்கூடங்களும் வியாதிகளுக்கு சிகிச்சை செய்யக்கூடிய ஔஷதாலயங்களும், ரணவைத்திய ஸ்தானங்களும் செவிடு, குருடு, ஊமை, நொண்டி முதலிய அவயவக்குறை வடைந்தவர்கள் படிக்கத்தக்க வித்தியாசாலைகளும், பல குற்றங்களுக்காக ராஜதண்டனையடைந்தவர் சிறைச்சாலையிலிருக்கும் காலத்திலும் அவர்களை துர்வழிகளிலிருந்து மீட்கும் ஏற்பாடுகளும், களவு கொள்ளை முதலிய தீச்செயலையே தொழிலாகக்கொண்ட ஜாதியாரை பெருமைபடுத்தி பழக்க உயர்ந்த நிலையுள்ள சன்யாசி உடைகளை அணிந்து கம்பீரமாக வாழ செய்திருக்கும் வஸதியாகிய இரக்ஷண்ய சேனை (Salvation army) முதலிய சன்மார்க்க கூட்டங்களும் ஏழைகள் வெட்கம், மானம், ஆண்மையிழந்து பிச்சை எடுத்து உயிரை வளர்க்காமல் கௌரவமாக காலக்ஷேபம் செய்யக்கூடிய கைத்

தொழில் சாலைகளும், பெற்றோர்களால் விவாகமில்லாமலும், தரித்திரியத்தினாலும், அல்லது தாய்தந்தையர் குரூரமனதினால் வெருட்டப்பட்ட திக்கற்ற குழந்தைகளை எடுத்து வளர்க்க அநாதாலயங்களும், கைம்பெண்களை கடைத்தேற்ற சரண்யாலயங்களும் ஏற்படுத்தி இருப்பது சாதாரணமாய் பார்க்கக்கூடியதாய் இருந்தாலும் இன்னும் விகாச முறையில் தனிகர் மத்திலிருந்து தவறி வீழ்ந்தவனுக்கு கைதூக்கி உதவும் பாகுபாடுள்ளது. மனிதன் உலக விகாஸ முறையில் ஹீனஸ்திதியை அடைந்திருந்தபோதிலும் அவன் கௌரவமானவன், அவன் அரிய பெருமைக்குரியவன்; அவனை உத்தாரணம் செய்யவேண்டியது அவனைக்காட்டிலும் உயர்ந்த நிலைமையிலுள்ளவர்கள் கடமை என்ற தத்துவமே அம்மதத்தின் சித்தாந்தம்.

மகம்மதிய மதத்தின் கொள்கைகளாவது கூறுவதற்கரிய தொண்டுகள் நிகழாவிட்டாலும் எல்லா மனிதரும் சகலத்திலும் சமரஸமாக வாழ உரிமையுண்டு. ஆண்டவனை இடையில் தரகர்களில்லாமல்தானே தொழவும் துதிக்கவும் பாத்தியமுண்டு அடிமைப்படுத்தி வாழும் குணத்தை முற்றிலும் நீக்கவேண்டியது வட்டி வாங்குவது போதை கொடுக்கக்கூடிய வஸ்துக்களை புசிப்பது முதலியவைகள் கனவிலும் கூடா. பிரதிதினமும் ஐந்துவேளைகளில் கடவுளை தொழவேண்டும். உலகத்து மக்கள் அனைவரும் சாந்தமாகவும் சாத்மீகமாகவும் அனுபவத்தின்பேரில் உயர்ந்த நாகரீக ஸ்தம்பத்தையடைய வேண்டுமேயொழிய வேகமாக சுயகலத்தைக்கொண்டு ஓடிக்கொண்டிருக்கும் நாகரீகத்தில் இஸ்லாமியர் கலந்துக்கொள்ளக் கூடாதென்பவற்றைப்போன்ற பல அரிய கொள்கைகள் சேமித்து வைக்கப்பட்டிருக்கின்றன.

இந்து மதக் கொள்கையாவது துன்மார்க்கர் கொடியர் முதலிய பாவிகளையும் அவர்கள் உறவுகளையும் அப்புறப்படுத்த வேண்டும். அவர்கதி அதோகதிதான், அவர்கள் ஜாதியிலிருந்து விலக்கப்பெற்று இனியாவது குற்றமற்ற வழிகளையடையா வண்ணம் தள்ளப்படுகிறார்கள் கிறிஸ்து மதத்தைப்போல் பாவிகளை நேசிக்கும் நோக்கமில்லாவிட்டாலும், கடவுளுடைய பக்தர்கள் பிராம்மணர்கள், மேலோர்கள் இவர்களுக்கு உபகாரம் செய்யவும், இவர்களை போற்றி காப்பாற்றவும் வசதிகளிருக்

கின்றன. தர்மத்தின் உன்னத சிகரம் இந்து மதமே கிறிஸ்து மதத்தைப்போல் சமூக மக்களை உயர்வு படுத்து முறையில் தர்மத்தை செய்யாதொழிந்தாலும் சமய ஆச்சார அனுஷ்டான விஷயங்களில் மகத்தான தர்மங்களடங்கியிருக்கின்றன. ஏழைகளுக்கு பிச்சையிடவும் தண்ணீர் பந்தல், மடம், சத்திரம், கோவில் குளம் முதலிய பல தர்மஸ்தாபனங்கள் நடைபெறுகின்றன. உலகமெல்லாம் முகர்ந்துகொண்டு போகக்கூடிய ஞானமும் தத்வமும் கொழுமையோடு பயிராகின்றன, இப்பொழுதிருக்கும் இந்தியர்களின் மனக்கோழைகளால் செய்யக்கூடாத உன்னதமும் உத்தமுமான பல உயர்ந்த வேத சாஸ்த்திர ஆராய்ச்சிகளும் பல இருந்தபோதிலும் அது இனி எதிர் காலத்திலும் உலக மக்களுக்கு ஞான கண் மலையிலிருந்து விழும் நீர் வீழ்ச்சிபோல் பலனளிக்கும் என்பதில் ஐயமில்லை.

இந்துமதத்தில் சிரமமில்லாமல் ஒவ்வொரு ஜீவனும் வாழ வேண்டிய சூக்ஷும விதிகளை போதிக்கின்றது கடவுளை வழிபடுவதற்கு பலவித பாகுபாடுகள் ஏற்படுத்தி இருப்பதோடு ஜீவகாருண்ணியத்தின் முடிவு கொள்ளப்பட்டிருக்கின்றது. வான சாஸ்திரம் சங்கீதம்போன்ற உத்தம சாஸ்த்திரங்களும் வித்வான்களும் மலிந்திருக்கின்றனர். மொத்தத்தில் இந்துமதம் சமய ஞானத்தையே அடிபீடமாக கொண்டு நிகழ்கின்றதினால் வேறு தேசத்தாரோடு சமத்துவமாக வாழக்கூடிய சமூக பிரச்சினைகள் இந்துமதத்தில் தற்காலம் அனுஷ்டானத்திற்கு கொண்டுவரவில்லை. ஆனால் அதற்காக தற்கால வாலிபர்கள் அரிய தியாகம் செய்கிறார்கள். சமூக கட்டுப்பாடான நிர்மாண வேலைகள் ஒழுங்காக அமைக்கப்படாவிட்டால் சாணை பிடிக்காத வயிரக்கல் போன்று பிரகாசமும் பிரயோஜனமும் பாழ்படும்

உதைப்பட்டபின் தெரிந்தது.

ஓர் என்ஜின் டிரைவர் வேலைக்கற்றுக்கொள்ளு மொருவன் ஓர் குதிரை லாயத்திற்குப் போய் குதிரைக்காரனைப் பார்த்து 50 குதிரை வேகம் என்றால் எப்படி காட்டமுடியும் என்றுக் கேட்டுக்கொண்டே குதிரை வாலை பிடித்தான், குதிரை வெருண்டு வேகமாக உதைத்தது. அவன் அந்தரமார்க்கமாய்ப் போய் வீழ்ந்தான்.

பெண் கல்வி.

அழகை விரும்பாதார் யாருமிலர். அழகு என்பதுதான் என்னையோ எனின் கூறுகிறோம். தூய்மையான எண்ணங்களாலும் திருந்திய பழக்க வழக்கங்களாலும், அன்புநிலை அறிவும் கலந்த செயல்களாலும் உடலின்கண் காணப்படும் ஓர் இனியத் தோற்றமே அழகெனப்படும் ஆண் மக்களிலும் பலர் அழகாய் இருக்கிறார்கள். பெண் மக்களிலும் பலர் அழகாயிருக்கிறார்கள் ஆனால் அழகு என்பது பெண்மக்கட்கே பெரிதும் வேண்டப்படுவது என்பது உலகவழக்கிலுள்ளதொரு கொள்கையாகும். இயற்கையில் பெண்களே ஆண்களைவிட அழகாயிருக்கிறார்கள். இந்தக் காரணத்தால்தான் ஆங்கிலேய நன்மக்கள் பெண்பாலரை 'அழகியர்' (Fair-sex) என்று வழங்குகிறார்கள். தமிழில் மாதர் என்னும் சொல்லும் அழகியர் என்ற பொருளைத் தருகிறது ஆகவே, நேயர்களே! 'அழகியர்' என்ற சிறப்புப்பெயரை உடைய பெண்மக்களுக்கு, அவர்கள் மேலும் அழகில் சிறந்து வருவதற்கான ஒரு நல் வழியைப்பற்றி இந்தக்கட்டுரையில் பேசலாம்.

'கல்வி அழகே அழகு.' என்று பண்டைகால ஆசிரியரொருவர் கூறுகிறார். இஃதென்ன விந்தை? அறிவை வளர்ப்பதற்குத் தான் கல்வி வேண்டுமேயல்லாமல் அழகை வளர்ப்பதற்கும் கல்வி வேண்டுமென்பது பொருந்தாதெனில், பொருந்தும் வகை காட்டுவது. மேலே அழகு என்பது என்ன என்பதைக் கூறினோம். உயிரின்கண் இனிமையிலாதபோது, உடலின்கண் இனிமை வருவது எங்கனம்? 'அகத்தினழகே முகத்தினழகு' என்னும் பழமொழியும், 'அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம் கடுத்தது காட்டும் முகம்' என்னும் ஆசிரியர் திருவள்ளுவர் வாக்கும் யாம் மேலே கூறிய உண்மையை வலிவுறுத்தல் காண்க. இதனால் அழகுக்கும் உள்ளத்திற்கும் உள்ள நெருங்கிய தொடர்பு எத்தகையது என்பதறிந்தோம். உள்ளத்தை பண்படுத்தும் வழி அழகையும் வளர்த்துவரும் என்பது மறுக்கமுடியாத உண்மையல்லவா? இனி நம் சகோதரிகளுக்கு உள்ளத்தை பண்படுத்துதற்கான ஒரு சிறந்த வழியென்ன என்பதைப் பார்ப்போம்.

இறைவன் உண்மையே உருவமானவன். உலகத்திலுள்ள உண்மைகள் மிகப்பல. உண்மையை உணர்ந்து கொள்வதுதான் அறிவெனப்படும். பளிங்கைப் பாசி மூடியிருத்தல் போல நம் அறிவை அறியாமை மூடியிருக்கிறது. அறியாமை நீங்க நீங்க அறிவு ஒளிவிட்டுத் தோன்றும். அறிவை உள்ளிருந்து வெளிக்குக் கொண்டுவருவதே கல்வியெனப்படும். மணற்கேணியைத் தோண்டத்தோண்ட நீர் பெருகி வருவதுபோலவே மக்களுக்குக் கற்க கற்க அறிவு பெருக ஆரம்பிக்கிறது, அறிவு பெருக உண்டாகவும் அரிய உண்மைகளை உணரத்துவக்குகிறோம். நாம் இக் கட்டுரையின் ஆரம்பத்திலேயே கூறிய உள்ளத்தூய்மை, இனியப் பழக்கவழக்கங்கள், முதலியவை சிறந்த உண்மைகள் அல்லவா?

பட்டுச்சேலை உடுத்து, மலர் சூடி, அணிகலன் அணிந்து அன்ன நடை நடந்து உலவி வருவதுதான் அழகென்று நினைத்திருக்கும் சகோதரிகளுக்காக வருந்துகிறோம். கல்வியறிவை உடைய பெண்மகள் ஒருத்தி உடுத்தும் அழகும்- நகைகள் அணிந்துகொள்ளும் வகையும் கல்வியறிவில்லா பெண்கள் மாட்டு காணா. அறிவுடையவர்கள் செய்யும் எந்தத் தொழிலும் திருத்தமாகவும் இனியதாகவும் இருக்குமென்பது திண்ணம். தமிழ் நாட்டுப் பெண்மக்களைக் காட்டிலும் வட நாட்டுப் பெண்கள் கல்வி அறிவில் மிகுந்தவர்கள் என்பது யாவரும் அறிந்ததே. பல்லாயிரக்கணக்கான ரூபாய்களைச் செலவழித்து காசுமாலையும், வயிர அட்டிகையும், கோணியைவிட கொஞ்சம் மெல்லிதான பட்டுச்சேலைகளையும் அணிந்து தங்களை 'அழகியர்' என்று மதித்திருக்கும் தமிழ்நாட்டு பெண்கள் நிலையையும், நன்கறிந்தாற்போல இரண்டொரு நகைகளை அணிந்து, வழுவழுப்பான மெல்லிய தூய ஆடை உடுத்தி, அடக்கமே அணிகலமாகக்கொண்ட வடநாட்டுப் பெண்கள் நிலையையும் ஒப்பிட்டுப் பார்த்து நாம் மேலே கூறிய உண்மையை அறிந்து கொள்க.

இயற்கையிலேயே கல்வி கற்பதற்கு வசதி வாயப் பெறாத சகோதரிகளுக்காக நாம் வருந்துகிறோம். அச்சம், மடம், நாணம் பயிர்ப்பு என்னும் நான்கு குணங்களையும் இழந்து விட்டு 'நாம் கல்வியறிவிற் சிறந்திருக்கிறோம்' என்று அகங்கரித்துத்திரியும் பெண்களைக்காட்டிலும், இயற்கையிலேயே அடக்கமும் அன்பும்

கொண்டு இனிய சொல்லும் இனிய செயலும் உடையவர்களாய் குடும்பத்தை நடத்துவதில் பொருந்திய கருத்துள்ளவர்களாய் பெண்மக்கள் (கல்வி அறிவில்லாதவர்களானாலும்) ஆயிரமடங்கு மேலானவர்கள் என்பதை நாம் ஒப்புக்கொள்ளுகிறோம். இச் சகோதரிகளுக்கு இயற்கையிலேயே வாய்க்கப்பெற்ற இவ்வருங் குணங்கள் கல்வியோடு கூடியிருக்குமானால் மேலும் மேலும் செழித்து வளர்ந்து அனைவருக்கும் மகிழ்ச்சியை உண்டுபண்ணும்.

'பெண் கல்வி' என்றவுடன் பெண்மக்கள் அனைவரும் பெரிய பட்டதாரிகளாக வரவேண்டும் என்று நினைத்துவிடுதல் கூடாது. உலக முன்னேற்றத்தில் பெண்மக்களுக்கிருக்கவேண்டிய பொறுப்பைக் காட்டிலும் ஆண் மக்களுக்கு அதிகமாகப் பொறுப்பு இருக்கிறது என நாம் கூறத் துணியவில்லை உலகமுன் னேற்றத்தில் முதன்மையான பொறுப்பு பெண்மக்கட்கே உரிய தாக இருக்கிறது. குழந்தைகளைப்பெற்று வளர்க்கும் பாக்கியத் தை உடைய அவர்கள் நல்ல மன நிலையும், உறுதியான அறிவும் உடையவர்களாக இருந்தாலன்றி அவர்களால் பெற்று வளர்க்கப் படும் குழைந்தைகள் (ஒரு நாட்டின் எதிர்கால பிரஜைகள்) தெள்ளிய அறிவும் ஆற்றலும் உடையவர்களாய் இருப்பார்கள் என்று துணிந்து கூறமுடியாது. 'தாயைப்போல பிள்ளை; நூலைப் போல சேலை' என்பது நம் முன்னோர் கண்ட உண்மையல்லவா?

கேவலம் அடிமை வலையில் சிக்கிக்கொள்ள ஏற்பட்டிருக்கும் உத்தியோக படிப்பையும், அறிவையும் பெண்கள் மோகிக்காமல் நீதி நூல்கள், பாக சாஸ்திரம், கைத்தொழில் சாஸ்த்திரம், குடும் பத்தை பேணும் நூல்கள் முதலியவற்றையும், நல்ல பத்திரிகை களையும் படித்து பழகவேண்டும். இன்றைய நிலையில் ஆலோ சித்து உறுதி செய்வோமானால் கீழ்நாட்டில் பலவித வழக்க வொ ழுக்கங்களடங்கிய நூல்களும், பழையகால கைத்தொழில்களும் பழையகால நாகரீக வாழ்க்கையுமே பெண்களுக்கு மனோபலம், தேகபலம், குடும்ப பலத்திற்கு ஆதாரமானதென ஒவ்வொரு வரும் முடிவுசெய்ய நேரிடும் அனுபோகமும், தொழில் வன்மை யும் இல்லாத கல்வி சிறிதும் பெண்களுக்குமட்டுமின்றி ஆண்களுக் கும் அவசியமில்லையென்பது தற்கால பெரியார்களின் முடிவு. தொழில்கல்வி ஒன்றே மேலானது. [தொடரும்]

போதை வஸ்துக்களின் விவாதம்,

நகைச்சுவை ததும்பும் கட்டுரை.

ஓர் நாள் பகலில் மிதுனபுரியில் கோட்டான் மண்டபத்தில் போதை வஸ்துக்களெல்லாம் ஒன்று கூடி தற்போழ்து மனிதர்கள் இடத்தில் தமக்கிருக்கும் செல்வாக்கு, சலுகை, அதிகாரம், நவீன அரசாங்கத்தாரால் தமக்குக் கிடைத்திருக்கும் சலுகை முதலிய வைகளைப்பற்றி பேசவும், அவற்றில் எந்த வஸ்துவுக்கு அதிக மதிப்பும் கௌரவமும் பலராலும் கொடுக்கப்படுகிறது என்னும் விஷயங்களைப்பற்றி விவாதிக்கவும் ஓர் மகாநாடு கூட்டவேண்டியது அவசியம் ஏற்பட்டது. அது போழ்து ஆங்கு சுருட்டு பீடி, சிகரெட்டு, சாராயம், கள், கஞ்சா, அபின் முதலிய பல பிர முகர்கள் கூடியிருந்தார்கள். சபை மிகவும் அலங்காரமாகவும் அமைதலாகவுமிருந்தது மிகுந்த ஆரவாரத்தினிடையே சாராயம் எழுந்து பெரியோர் சிறியோர் யாவர் முதல் அனைவராலும் உபயோகத்தில் தற்கால மிருக்கும் பீடி அவர்களையே அக்கிரா சனம் வகிக்கும்படி கேட்டுக்கொண்டது. பலருடைய ஆதரவின் பேரில் அங்ஙனமே பீடி அவர்கள் அக்கிராசனம் வகித்தார்.

உடனே சபையில் சிகரேட்டு எழுந்து இந்த சபையில் வயதில் முதிர்ந்த சுருட்டு, கள் கஞ்சா முதலிய பெரியாருக்கு வாழ்த்து கூறுவதாக ஓர் தீர்மானம் நிறைவேறியது.

அக்கிராசனர் எழுந்து சபையிலுள்ள ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் பெருமைகளை எடுத்துச்சொல்லலாம் என்று வேண்டிக்கொண்டார்.

பெருத்த கரகோஷத்தினிடையே சுருட்டு எழுந்து தன்னுடைய பெருமைகளையும் தற்காலம் வாலிபர்கள் தன்னை அசட்டை செய்வதால் தமக்கேற்பட்டிருக்கும் வியாகூலத்தையும் கூறி ஆதியில் பீடி சிகரெட் ரோக் முதலிய எனது வம்சத்தார் உண்டாவதற்கு முன்னமே நானே உலகத்தில் தோன்றி மேனாட் டிலும் கீழ் நாட்டிலும் குடி புகுந்து பல மனிதர்களின் ஆதரவு பெற்றிருக்கிறேன். என்னை பிடிப்பவர்க்கு காரம் மணம் மயக்கம் முதலிய குணங்களை கொடுக்கிறேன், வயதிலும் குணத்திலும் நானே பெரியவன் என்றது.

உடனே சிகரேட் எழுந்து அது சுத்த தவறு. பழையகால கிழப் பிணங்களே இக்காலத்து கலாசாலை மாணவர்களும் நாகரீகக் காரர்களும் ஒருக்காலும் சட்டைபண்ணமாட்டார்கள். சில நாட்களுக்கு முன்பு பல வாலிபர்களாலும் பாலர்களாலும் பெண்மணிகளாலும் ஆதரிக்கப்பட்டு வந்தேன். அப்பொழுது என்னை காசுக்கு இரண்டாக விற்று வந்தார்கள். ஏதோ கஷ்ட காலத்தினால் இப்பொழுது பலராலும் பிடிக்காதொழிந்தாலும் என்னை புதிய நாகரீக கலாசாலை மாணவர்களும் மானவிகளும் துரை மக்களும் ஆதரித்து வருகிறார்கள். சாதாரண ஏழை ஜனங்கள் எத்தனைபேர் என்னை விட்டுவிட்டார்களோ அதற்கு பதிலாக உத்தியோகஸ்தர்கள் அதிலும் பரிதானம் வாங்கும் உத்தியோகஸ்தர்கள் தினம் ஒன்றுக்கு 15 பேக்கெட்டுக்குமேல் பிடிக்கிறார்கள். முந்தி பைசாவுக்கு இரண்டு விற்ற சிகரெட்டுகள் 6 பைக்கு ஒன்றாக 10 சிகரெட்டுகள் 100 சிகரெட்டுகள் அடங்கிய டப்பிகளில் பாக் செய்து விற்பதால் விற்று மதிப்பில் முந்திய மதிப்பை விட குறையவில்லை. தவிர சீனிமா நாடகசாலைகள் புழுத்துவிட்டதால் முற்காலத்தைப்போல் பகற்காலத்தில்மட்டு மல்லாமல் இராக்காலத்திலும் விசேஷமாக என்னை உபயோகிக் கிறார்கள். பல நண்பர்கள் ஒருவர்க்கொருவர் உபசாரம் செய்து பக்ஷணங்களை வாங்கி கொடுத்து சந்தோஷமடைகிறவர்கள் இப்பொழுது என்னை அழகுபடுத்திய கோல்ட்பிளேக் பாக்கெட்டு களில் பாக் செய்து கடைகளில் விற்கப்படுவதால் என்னையே நண்பர்களுக்கு வாங்கி கொடுத்து இருவரும் புகை பிடித்து பிடித்து ஆனந்திக்கும் காக்ஷி பார்க்கத்தக்கது. ஆகையால் முந்திய மதிப்பை விட விற்று மதிப்பிலும், அதிக கிராக்கியிலும் நானே முன்னணியில் இருக்கிறேன். எனக்காக பல பிரபுக்கள் மேனாட்டில் லக்ஷக்கணக்கான பொருள் செலவிட்டு தயாரிப்பதிலிருந்து என்னுடைய உயர்வு சபைக்கு அதிகம் சொல்லத் தேவையில்லை என்று இதோடு நிறுத்துகிறேன்.

'பீடி' கோபா வேசமாக எழுந்து உன் வாயை மூடு! சபை யிலுள்ள மற்றவர்களின் பெருமை உனக்கு தெரிந்திருந்தால் நீ ஒருக்காலும் சொல்லத்துணியாய். நீ தற்பெருமைக்காரன். உன் னால் இருமல், காசம், இருதய பலயீனம், மூளை கோளாறு முத லிய பலவித வியாதிகள் அவர்களுக்கு நேரிடுகின்றது. [தொ-ம்]

ஐரோப்பா யுத்தமேகம்.

ஸ்பெய்ன் உள்நாட்டுக்கலகம் இது கடூரமான ஓர் பெரிய ஐரோப்பிய நெருக்கடியைக் கொண்டுவந்து விடுமென்று அடிக்கடி ஜோசியங்கள் வெளிவந்துக் கொண்டேயிருந்தது வாசகர்களுக்குத் தெரியும். அந்த ஜோசியம் வர வர உண்மையாகிக்கொண்டு வருவது கண்கூடு. நடுநிலைமை வேதாந்தம் பேசிக்கொண்டு ஐரோப்பிய நாடுகள அந்தரங்கத்தில் கழுத்தையருக்கச் சூழ்ச்சி செய்து வருகின்றன. இதாலிக்கும், ஜெர்மனிக்கும் ஸ்பெயின்மீது கண். விசேஷமாக மொராக்கோமீதுதான்! ஜெர்மனி குடியேற்ற நாடுகளுக்காகத் தவித்துக்கொண்டிருக்கிறது, அதற்காகவே அது ஸ்பெயன் மொராக்கோமீது கண்வைத்துக் கொண்டு ஸ்பெயின் புரட்சித்தலைவருன பிராங்கோவுக்கு உதவிச் செய்து வருகிறது ஸ்பெயின் மொராக்காவுக்கு அடுத்தாற் போலிருப்பது பிரஞ்சு மொருக்கோ. இதிலிருந்து ஜெர்மனியன் அந்தரங்க நோக்கத்தை அறிந்து கொள்ளலாம. ஜெர்மனியும், அதன் சர்வாதிகாரியா னஹிட்லநும் என்னதான் உலக சமாதானம் பேசட்டும், அந்தரங்கத்தில் ஹிட்லருக்குப் பிரான்சையும், பிரிட்டினையும் அடுத்தாற்போல் ரஷியாவையும் பழிவாங்க வேண்டுமென்ற எண்ணமுண்டு. இதற்காகவே அவர் ஸ்பெயின் புரட்சியைத் தள்ளிவிட்டு, மொராக்கோவில் கைவைக்க எண்ணுகிருர். அவர் எண்ணியபடி ஜெர்மன் துருப்பு ஸ்பெயின் மொராக்கோவிற்கு சென்றிருப்பதாக ஒரு செய்தி கிடைத்திருச்கிறது. இச்செய்தி வெளியானதும், பிரான்ஸ் துடிதுடித்து ஸ்பெய்ன் மொராக்கோவில் ஜெர்மனி துருப்புகள் இறங்குமேயாயின் அதனல் பிரஞ்சு மொராக்கோவுக்கு ஆபத்து நிச்சயம். இதை பிரான்சு பலமாகக் கண்டித்துக் கூச்சல் போட்டது. ஜெர்மன் சர்க்காருக்குக் கடிதம் எழுதியது. ஜெர்மனி சர்க்காரோ அதை மறுக்கின்றது. ஜெர்மன் துருப்புகள் மொராக்காவுக்குப் போகவில்லை அது சுத்த அபத்தமென்று கூறுகிருர்கள். ஹிட்லர் கூட அவ்வாறே கூறுகிருர். பிரான்ஸை எதிர்க்கவேண்டுமென்ற நோக்கமே கிடையாதாம்! உலக சமாதானமே ஹிட்லர்

நோக்கமாம் இது எவ்வளவு தூரம் உண்மை என்பது உலக மக்களுக்குத் தெரியும். ஹிட்லரும், முஸோலினியும் சமாதானம் பேசுவதில் நிபுணர்கள். உள்நாவில் பகையும், நுனி நாவில் உறவும் கொண்டாடுகிறவர்கள். இப்பேர்ப்பட்ட ஹிட்லர் முஸோலினியின் வார்த்தைகளை பிரான்ஸ் சரிதான் என்று ஏற்றுக்கொண்டது. ஆனால், வெளிக்குத்தான் பிரான்ஸ் அந்த வெறும் வாக்குறுதியை ஏற்றுக்கொண்டதே தவிர உள்ளூற அதற்குப் பயந்தான். பிரான்ஸ் ஜெர்மனியைக் கண்டித்ததும், உடனே ஜெர்மனி பிரான்ஸ்மீது ஒரு புகாரை கட்டிவிட்டது. ஸ்பெய்ன் மொராக் கொவை ஜெயிக்க பிரஞ்சுத் துருப்புகள் வந்திறங்கியிருப்பதாகவும் ஸ்பெய்ன் சர்க்காருக்கு பிரான்ஸ் உதவிச்செய்வதின் ரகசியம் இதுதானென்றும் ஜெர்மனி ஒரு பெரிய பழி போட்டது. பிரஞ்சு சர்க்கார் அது பொய் என்று மறுத்துவிட்டார்கள். இவ்வாறு ஐரோப்பிய தேசங்கள் ஒன்றின்மீது மற்றொன்று பழி சுமத்திக் கொண்டே வருகின்றன. இதெல்லாம் எதற்கு? அடுத்த யுத்தத் துக்கு அடிகோலுவதற்குத்தான்.

குடியானவர்கள் புலம்பல்.

பயிரிடும் தொழிலே ஏனைய தொழில்களனைத்தினும் அவசியமானதும் என்றும் நிலையாய தொழிலுமாகும். பயிர்த் தொழில் தற்காலம் க்ஷீணித்துப்போயிற்று காரணம் குடியானர்கள் ஏழ்மையில் மூழ்கிவிட்டார்கள். யானையை கட்டிவைத்து தீனி போடுவதுபோல் நிலத்தை பண்படுத்த ஏராளமாக செலவு செய்யவேண்டும். இதைப்பற்றியன்றோ "இளைத்தவனுக்கு இரும்பு; வலுத்தவனுக்கு கரும்பு" என்று சொல்லப்படுகின்றது. பயிரிடும் குடியானவனுக்கு உலகத்திலுள்ள ஒவ்வொரு தொழிலாளியின் உறவும் சாமான்களும் வேண்டியிருக்கிறது. ஆனால் இதர தொழில்களுக்கோ அந்த தொழிலுக்குரிய ஆயுதங்களே போதுமானது. பயிர்த்தொழிலாளி தனிப்பட்ட மனிதனால் பயிர்த்தொழிலை செய்து பூர்த்திசெய்ய முடியாது. குடியானவன் கூலிகள், மிருகங்கள், பொது ஜனங்கள், உத்தியோகஸ்தர்கள் முதலிய பலருடைய கூட்டுறவும் வேண்டி நிற்கின்றான்.

பயிரிடும் தொழிலை ஆரம்பிப்பதற்கு ஆயிர ரூபாயிக்கு குறையாத மூலதனமிருக்கவேண்டும். ஒரு வருடத்திற்கு தன் குடும்பத்துக்கு வேண்டிய ஆகார பண்டங்கள், நிலம் செய் நேர்த்தி சிலவு, உப தொழிலாளிகளேயும், ஆடு, மாடு, நாய் முதலியவைகளை காப்பாற்றக்கூடிய ஒருவருட ஆகார வசதிகள் கையிருப்பு இருத்தலோடு மண்வெட்டி, களைவெட்டி, கொடுவாள், அறிவாள், சால், ஏற்றம், கலப்பை, கார் முதலிய ஆயிரக்கணக் கான சாமான்கள் தயாராயிருக்கவேண்டும். இதனுலன்றோ "சீரைத்தேடின் ஏரைத்தேடு" என்று ஒளவை பிராட்டியாரும் புத்தி புகட்டியிருக்கிறூர். இத்தனை மகத்தான சௌகரியங்கள் வாய்ந்தவனே சாதாரண ஆரம்பக் குடியானவன் என்று சொல்லப்படுகிறுன். வேறு பிழைக்க வழியில்லாமலும், சாக மன மில்லாமலும் உயிர்ப் பிணங்களாய் கோடிக்கணக்காய் இந் நாட்டில் பயிர்த்தொழில் ஈடுபட்டு மழை பெய்தவுடன் வசதியுள்ள குடியானவன் உழுது களைத்த மாடுகளையும் கலப்பை கருவிகளை யும் இரவலாக பெற்று பூமி உலர்ந்த பிறகு அவனிடம் கடனுக விரை வாங்கி அடுத்த மழையை எதிர்பார்த்து அவனிடம் விரை வாங்கி விரைப்பதும், மற்றும் பல காரியங்கள் அப்படியே காலங் கடந்து செய்வதினுல் பயிர்த்தொழில் நஷ்டமின்றி லாபம் ஒரு நாளும் அடைவதில்லை. செய்நேர்த்திக்காக பெரிய குடியானவ னிடம் வேலை செய்து கூலி பெற்று அந்த கூலியில் பாதி ஜீவனத் துக்குட்படுத்தி எஞ்ஜிய பொருளை செலவிட்டு பயிரிட நினைக்கும் குடியானவனை என்னென்று கூறுவது. இவர்கள் குடும்பத்தின் ஆகாரம், இடுப்பில்கட்டும் துணி, குடியிருக்கும் வீடு, சுகாதார வசதிகள் நல்லொழுக்கம் இவைகளை உற்று கவனித்து எழுதுவது எமலோகத்தின் கொடுமையைவிட ஆயிர மடங்கு அதிகமாகவே இருக்கும். அவர்கள் புலம்பாத நாளே கிடையாதென்னலாம். தினம் தினம் பலவித கஷ்டங்கள் ஒன்றன்பின் ஒன்ருய் சினிமா பிலிம்போல் வந்துகொண்டே இருக்கும். பாவம் ; இவர்கள் பிச்சை எடுத்து வயிறு வளர்க்க வெட்கப்பட்டுக்கொண்டு பயிர்த் தொழிலில் ஊடாடும் மக்கள் கோடானுகோடி.

ஏழ்மைக் குடியானவர்கள் ஒரு விதத்தில் சுயேச்சையான வர்கள் என்று சொன்னுலும் பலவிதத்தில் அடிமைப்பட்டவர்

களே யாவர். சத்தியமாகவே! ஜெயில் கைதிகளை விட மிகவும் பயங்கரமான கொடுமைக்குள் அகப்பட்டு விழிக்கிறார்கள். நெல் விளைந்தவுடன் களத்திலேயே கடன்காரன் அளந்துகொண்டு போய்விடுகிறான். மீதி தானியங்களை நில வரிக்காக தோட்டி மறித்துவிடுகிறான் ஆறுமாதகாலமாய் கஷ்டப்பட்டு பயிரிட்டவன் இலவுகாத்த கிளிபோல் ஆகாயத்தை அண்ணார்ந்துப்பார்த்து கண்ணீர் வடித்து தெய்வமே? என வீட்டுக்குப்போய் அன்றைய ஜீவனத்துக்கே திரும்பவும் கடன்பட முயலுகின்றான். அதைப பெருவதற்குள் பலநாள் பட்டினிகிடந்துழல்கிறான். சிலர் சாகத் துணியாமல் ஏதோ காட்டுக் கிழங்கு, சப்பாத்தி, ஓணான், ஆமை, முதலியவைகளை பிடித்து தின்பாருமனந்தம். கௌரவ குடியான வர்களும் வெளிக்கு மதிப்பாக இருந்தபோதிலும் அவர்கள் ஆஸ்தி முழுதும் பாங்குகளில் பெரும்பாலும் அடமானம் வைக்கப்பட்ட தாகவே இருக்கும். துரதிஷ்டமான இந்தியக் குடியானவர்களின் தொல்லைகளை விளக்கி விளக்கி நூறு வருஷம் ஓயாமல் எழுதினாலு முடியாது?

கிராம நிர்மாணமும், கூட்டுறவும்.

இப்பொழுது எங்கும் கிராம நிர்மாணம்பற்றி பேசப்படு கிறது. பிரசங்கம் செய்வோர் அனைவரும் கிராமத்துக்குப் போங் கள் என்று கூறுகிறார்கள். ஐக்கோர்ட்டு மாஜி நீதிபதிகளும் மாஜி சப் ஜட்ஜுகளும் இதே பல்லவி பாடுகிறார்கள். ஆனால் அவ்விதம் பேசுவோர் கிராமங்களுக்குச் சென்று வசித்து பிற ருக்கு பாடங்கற்பிக்க கருதுகிறாரில்லை. சாதாரண குமஸ்தா முதல் கீழ்தர உத்தியோகஸ்தர்களின் மனோமேட்டிமையும் அகம்பாவமும் அளவுகடந்ததாய் இருக்கின்றன. சாதாரண குடியானவனுடன் பேசவும் அவனது குறைகளை கேட்கவும் அவனுடன் இன்சொல்லால் அவனை நல்வழி படுத்தவும் ஒரு குமஸ்தா ஒற்றுக்கொள்ளமாட்டான். கீழ்தர உத்தியோகஸ்தர் களே அவர்களிடம் போதுமான நாகரீகமும் அறிவுமில்லை என்று மிகுகத்தனமாய் அவர்களை நடத்துகிறார்கள். ஏதேனும் விபரம் கேட்டாலும் ஒன்று கிடைக்க மற்றொன்றை சொல்லுவார்கள். வீட்டுக்குபோனால் குப்பகாட்டுகூஸ் வெளியே போ என்று

சொல்லுவார்கள். இதைப்போன்ற பல விவகாரங்களில் அவர்களை வேறுபடுத்தி நடத்துவார்களே யொழிய அவர்கள் மனிதர்களின் உயிர்வாழ்க்கைக்கு ஆதார பொருள்களை சேமித்து கொடுக்கும் தெய்வங்களென அவர்கள் கருதுவதில்லை.

வேலையிலிருந்து விலகியபொழுதாவது ஒழிந்தநேரங்களில் ஏழைக் குடியானவர்களுடைய வீடுகளுக்குபோய் அவர்களுடைய குறைகளை கேட்டு ஆறுதல் சொல்லவும், வீடு திரேகசுத்தங்களை பற்றி போதிக்கவும், குடும்ப ஒற்றுமையும் மற்றவர்களோடு கூட்டுறவு செய்யும் முறைகளையாவது விவரித்துரைப்பார்களா? ஐயோ இன்னாட்டு சகோதரத்தன்மை அன்னாட்களாக சீர்கேடடைந்து வருகிறதேயன்றி மக்களிடத்தில் அன்பை பெருக்குவதாயில்லை.

இனியாவது உத்தியோகஸ்தர்கள் ஓய்வு நேரங்களிலும் வேலையிலிருந்து விலகிய காலங்களிலும் கிராமங்களுக்கு சென்று அவர்களோடு பல விஷயங்களைப்பற்றி சம்பாஷித்து புத்தி போதித்து வருவார்களாக இதனால் அவர்களுக்கு இவர்களால் யாதொரு பிரயோஜனமில்லாவிட்டாலும், மனமாறுதலாவது ஒருவாறு தெம்பு உண்டாகும். இதைப்பற்றி நமது இராஜப் பிரதிநிதிகள் அவர்களும் ஆயிரக்கணக்கான உயர்ந்த உத்தியோகஸ்தர்களும் கீழ்தர உத்தியோகஸ்தர்கள் கிராமங்களுக்குபோய் அவர்களின் குறைகளை தீர்க்க வழி தேடுங்கள் என்று கூக்குரலிடுகிறார்கள். உத்தியோகஸ்தகர்கள் மட்டுமே இந்நாட்டில் கல்வி பயின்று இருப்பதால் அவர்கள் மனம் வைத்தாலல்லது ஆயிரந்தாலும் நமது கிராமாந்தரங்களும் ஏழை மக்களும் ஒரு நாளும் வறுமையிலிருந்து விடுதலையடையப்போவதில்லை. அறிவாளிகளுடைய நீண்டகால அனுபவமும் ஆழ்ந்த கல்வியறிவும் ஏழை மக்களுக்கு உபயோகப்படும்படி மேலதிகாரிகள் அரிய தொண்டு செய்வார்களாக.

கிராமப் புணருத்தாரணத்திற்கு மற்றொரு சாஸனம் சங்கம் அமைத்தல் விவசாய கூட்டுறவு சங்கம், வியாபார கூட்டுறவு சங்கம், நீதி பரிபாலன சங்கம், கிராம சீரமைப்புகளிலும் தர்ம பரிபாலன சங்கம் என பல சங்கங்கள் தோன்றல் வேண்டும்.

இந்த சங்கங்கள் மூல்யமாய் ஒவ்வொன்றின் அபிவிர்த்திக்குரிய பலதரப்பட்ட விஷயங்களை ஆலோசித்து முடிவு கூறி அதனை ராஜாங்கத்துக்கு தெரிவிப்பதோடு அந்த முடிவுபடி நிர்மாண வேலைகளை ஏற்று சிறப்பாக செய்துவரல் வேண்டும்.

உதாரணமாக:—பயிரிடுவோர்கள் சங்கம் என்பதை எடுத்துக்கொள்வோம். சென்ற நூறு வருடங்களாக கிராமாந்தரங்களில் குடியானவர்களின் நிலைமை மிகவும் சீர்கேடடைந்து இருக்கிறது. வருஷவாரி ஏரிகளை பலப்படுத்தும் ஒழுங்கு கிடையாது. வயல்களை மேடுபள்ளம் திருத்தக்கூடியதும் இயற்கையாக எருவும் மரவுணவுசாரம் உண்டுபண்ணும் வழிகள் கிடையா. வாய்க்கால்களையும் வயல்களையும் கூட்டுறவுவின்பேரில் ஒழுங்கானதும் கல் கட்டடத்தினுல் ஆக்கப்பட்டதும் கிடையாத வயல்களுக்கு எருகொண்டு போவதற்கு மையத்தில் தண்டுகரை வண்டிப்பாதைகள் கிடையாது. தானியங்களை கல், தூசு பதரில்லாமல் சேர்ப்பதற்கு கிராமங்களில் கல்லுகளால் தள வரிசைப் போட்ட களங்கள் கிடையாது. ஆற்றுக்கால் வாய்க்கால் பல ஏரிகளுக்கு கிடையாது. ஜலத்தை தேக்கிக்கொள்வதற்குரிய ஏதேனும் தந்திரங்களை ஜனங்கள் யோசிப்பதும் கிடையாது. குளம் குட்டைகளை சீர்படுத்தவும், கனித்தோட்டங்கள் வைப்பதைப்பற்றியும் யாதொரு கூட்டுரவும் கிடையாது. வருடவாரியாக வேண்டிய உழவு கருவிகள் விதை தானியங்களை சேகரம் செய்யும் பொதுபண்டசாலையுமில்லை குடியானவர்கள் அனைவரும் வருடவாரியாக சாப்பாட்டுக்கு வேண்டிய தானியங்களும் நிறந்தரமான கைத்தொழிலு மிருக்கிறதாவென ஒவ்வொரு கிருஷியையும் விசாரித்து உதவி செய்யக்கூடிய உஷார் சங்கங்கள் கிடையா. மழை வருஷாவருஷம் அந்த கிராமமதில் பெய்யக்கூடிய நிலைமை ஆலோசித்து கண்டு பிடிக்கவில்லை. தோப்பு துரவுகள் பள்ளிக்கூடங்கள் இவைகளைப்பற்றி கவனிப்பதே கிடையாது. கூட்டுரவு விவசாயத்தின் பலனை கையாண்டு பார்க்கவும் கிடையாது பயிர்த்தொழில் விர்த்தியடையும் ஓர் சிறந்த நாட்டினர்க்குரிய அங்கங்கள் ஆயிரத்தில் ஒன்றுவது இந்நாட்டில் கிடையாது இவைகளைப்பற்றி பயிரிடும் ஆலோசனை சபையார் அடிக்கடி மீட்டிங்குகள் போட்டு கைப்பற்றிய ஆலோசனைகளை குடியானவர்களுக்கு தெரிவிக்கவும்.

நிர்மாண வேலைகள் செய்யவும் தேவையான உதவிகளுக்காக அரசாங்கத்துக்கு விண்ணப்பங்கள் அனுப்பவும் வேண்டிய சீர்திருத்த செய்யவேண்டிய காரியமாகும்.

காங்கிரஸ் வெற்றி!

சென்னை மாகாணமெங்கும் காங்கிரஸுக்குப் பரிபூர்ண வெற்றி. சென்னை மேல்சபையிலும் காங்கிரஸுக்கு வெற்றி. சரியான மெஜாரிட்டி. 46 ஸ்தானங்களுள்ள மேல் சபையில், காங்கிரஸ்காரர் 27 ஸ்தானங்களைக் கைப்பற்றியிருக்கிறார்கள். சுயேட்சை வாதிகள் நால்வர் காங்கிரஸ் கட்சியில் சேர்ந்து கொண்டனர். ஆகவே, கவர்னர் 10 ஸ்தானங்களுக்கு நியமனஞ் செய்தபோதிலும், காங்கிரஸுக்கே தெளிவான மெஜாரிட்டி இருக்கும். சென்னை அசெம்பளியில் மொத்தம் 215 ஸ்தானங்களுண்டு காங்கிரஸ்காரர் 159 ஸ்தானங்களைக் கைப்பற்றி இருக்கிறார்கள். ஜஸ்டிஸ் கட்சிக்கு 16 ஸ்தானங்கள்தான். புதிய கட்சிக்கு, ஐயோ பாவம்! 2 ஸ்தானங்கள்! அங்குமிங்கும் ஊசலாடும் 21 ஸ்தானங்கள். எங்கும் காங்கிரஸுக்குப் பரிபூர்ண வெற்றி இந்த வெற்றியை வேறு எந்த மாகாணத்திலும் காண முடியாது சென்னை வாசிகளின் தீவிர காங்கிரஸ் பக்திக்கு இதை விட வேறு உதாரணம் வேண்டியதில்லை. தேச பக்தியில் இதர மாகாணங்களை சென்னை தோற்கடித்து விட்டது.

ஜஸ்டிஸ் கட்சியில் ஜாமீன் இழந்தவர்கள் 13. புதுக் கட்சியில் ஜாமீன் பறிகொடுத்தவர்கள் 23 சுயேட்சை 53 காங்கிரஸ் முஸ்லிம் ஒருவர், மொத்தம் சுமார் 90 பேர் ஜாமீன் இழந்தார்கள். சர்க்காருக்கு சுமார் 22,500 ரூபாய் அதிர்ஷ்டம்!

(பலஹீனனை) ஏமாந்தவனை மிரட்டும் சாமி.

ஓர் காட்டில் அய்யனார்கோவில் ஒன்றிருந்தது ஓர் வாலிபன் சில தினங்களாக குதிரைமீது ஏறிக்கொண்டு அய்யனார் எதிரே போய் என்னோடு குதிரை பந்தயத்துக்கு வருகிறாயா என்று பலநாள் மிரட்டி பரிகசித்தானாம். அய்யனார் இந்த துன்பம் தாளாமல் ஓர் நாள் இராத்திரியில் பூசாலி வீட்டுக்கு போய் அவனை மிரட்டி தனக்கிருக்கும் குதிரைக்காரன் கஷ்டத்தை தீர்க்கா விட்டால் உன்னை கொன்றுவிடுவேன் என்று பயமுறுத்தியதாம்.

ஆசிரியர் நண்பன்

ஆரம்பக் கல்விச் சட்டத்திருத்தம்.

G. O. No., 2564 (1—12—36)

1922-2-21ல் நிறைவேற்றப்பட்ட கல்விச் சட்ட திருத்தங்கள் மீண்டும் டிசம்பர் மாதம் முதல் தேதி திருத்தப்பட்டிருக்கின்றன.

1 (a) பழைய சட்டம் 41-வது செக்ஷன் 1-வது பிரிவு ரிகக்னிஷன் சம்மந்தமாகவுள்ளதில் முதலாவது விதியுடன் கீழ்க் காணும் விஷயம் சேர்க்கப்பட்டிருக்கிறது :—

பள்ளிக்கூட டெப்டி இன்ஸ்பெக்டர்களிடமாவது அல்லது சப் அவிஸ்டெண்டு இன்ஸ்பெக்ட்ரஸ் இடமாவது புதிய பள்ளிக்கூடம் ஏற்படுத்த விரும்பும் நிர்வாகஸ்தர்கள் முன்னதாகவே அனுமதி பெற்றிருக்கவேண்டும். வ்விதம் அவர்களிடமிருந்து அனுமதி பெறாது திறக்கப்பட்ட பிரைவேட் நிர்வாகஸ்தர்களுடைய பள்ளிக்கூடம் அங்கீகாரம் செய்யப்படமாட்டாது

b 1-A சட்டத்திற்குப்பின் கீழ்க்காணும் விஷயம் சேர்க்கப்பட்டிருக்கிறது.

1-B தற்காலிக அங்கீகாரம் பெற்றிருந்த பள்ளிக்கூடங்களின் நிர்வாகஸ்தர்கள் அங்கீகாரத்துக்குக் குறிப்பிட்டகாலம் நடந்து ஒரு மாதத்திற்குள் மேற்பார்வை உத்தியோகஸ்தர்கள் மூலமாக ஜில்லாக் கல்விச் சபைக்கு மீண்டும் அங்கீகாரம், தரும்படி மனுச்செய்துகொள்ளவேண்டும்.

(c.) 6-வது விதிக்குப் பதிலாகக் கீழ்க்காணும் விஷயம் சேர்க்கப்பட்டிருக்கிறது;—

6. ஆவரேஜ் அட்டன்டென்ஸ் ஒருவகுப்பிலோ அல்லது ஒரு வகுப்பின் ஒரு செக்ஷனிலோ 35 பையன்களுக்கு மேற்படுமானல், அந்த வகுப்பு இரண்டாகப் பிரிக்கப்படவேண்டும். டெப்டி இன்ஸ்பெக்டர் அல்லது சப் அவிஸ்டெண்டு இன்ஸ்பெக்டரஸ் யோசனைப்படியும் நடந்து கொள்ளலாம்.

தொடரும்]

தமிழ்நாட்டு பிரமுகர்,

A. K. ருத்திரப்ப முதலியார், விழுப்புரம்.

"குப்பைக்குள்ளிருந்தாலும் குன்றுமணி குன்றுமணியே
நஞ்சுக்குளிருந்தாலும் நாகமணி நாகமணியே"

என்றபடி உத்தம குணங்களும், ஈகையும், பரோபகார சிந்தையும், தன்னைப்போல் பிறரை நேசிக்கும் தன்மையுள்ளவர் மிகச் சிலரேயாவர். அவர்களில் நமது A. K. ருத்திரப்ப முதலியாரும் ஒருவராவர். இவர் வேளாள மரபில் உதித்த குழந்தை வேலு முதலியார் அவர்கள் புதல்வர் இவர் தென்னிந்திய ரயில்வே இலாகாவில் உத்தியோகத்திலமர்ந்து டிபாட்மெண்டாருக்கும், பொது ஜனங்களுக்கும் நன்கு உழைத்து வந்திருக்கிறார். பின்னர் உபகார சம்பளம் பெற்று இப்பொழுது பலவித வியாபாரங்களை செய்து வருகிறார். இவரிடம் பல ஏழை தொழிளாளிகள் அடைக்கலம் புகுந்து ஜீவித்து வருகிறார்கள். பசித்தார்களுக்கு அன்னம் அளிக்கும் தயாள குணமுள்ளவர். தன்னால் கூடியவரையில் பலர்க்கு உபகார சிந்தையுள்ளவராயிருக்கிறார். இவர்க்கு ஆண்டவன் நீண்ட ஆயுளும், குடுப சுகமும், சகல வசதிகளும் செல்வமும் பெருக உண்டாக அருள்புரிவாராக.

நன்றி பாராட்டு

திண்டிவனம் ஜீவரக்ஷா பிரசார சபை காரியதரிசி சி. சாமிக்கண்ணு அவர்கள் சமரச பத்திரிகையின் முன்னேற்றத்தில் அரிய தொண்டு செய்திருக்கின்றார். இவர் மனித ஜன்மங்களில் புருஷோத்தமனாகும். உண்மையில் வீரக்கோல் இவர் கையிலுள்ளது. தனிப்பட்ட முறையில் எனக்கு அருமையான சகோதரராகவும் நண்பராகவும் ஊன்றுகோலாகவும் இருப்பது போற்றத்தக்கது. இவர்க்கு ஆண்டவன் பெருஞ்செல்வமும் ஆயுளும் அருள்வாராக

சமரசம் சந்தாநேயர்களுக்கு.

புதிய வருஷத்து சந்தா தொகையை சிரமமில்லாமல் ஆபிஸூக்கு சேரும்படி செய்வார்களென்று கோருகிறோம்.

உலகப் போக்கு.

சூயஸ் கால்வாயை வெட்டுவதற்கு 24,150,000 பவுன் செலவாயிற்று.

*　　*　　*

யானை தினம் 4 அல்லது 5 மணி நேரத்திற்கு அதிகமாக தூங்குவதில்லை.

*　　*　　*

உலகில் 5,00,000 மைல் நீளம் ரெயில் பாதைகள் இருக்கின்றன.

*　　*　　*

எல்லா பிராணிகளுக்கும் ஆமையே அதிக நாள் உபவாஸ விரதமிருக்கக்கூடியது.

*　　*　　*

லண்டனிலுள்ள செயின்ட் பால் மாதாகோவிலுக்குள் ஏக காலத்தில் 26,000 பேர்கள் நிற்கலாம்.

*　　*　　*

பதினைன்காவது நூற்றாண்டின் மததியிலேயே இங்கிலாந்தில் விளையாடும் சீட்டுகள் உபயோகத்திற்கு வந்தன.

*　　*　　*

கிரேக்கர்களுக்கு வெண்ணெய் என்னவென்று தெரியாது. அதனால் அவர்களுடைய பாஷையில் அதற்கு வார்த்தையில்லை.

டெனன்ட் என்னுமிடத்தில் சமீபத்தில் ஒரு குழந்தைப் பிறந்தது. அந்தக்குழந்தைக்கு கீழ்வரிசைப்பற்கள் யாவும் முளைத்திருந்தன.

*　　*　　*

இடிகள் பொதுவாக வளர்ந்த மரங்களையே தாக்குகின்றன. தேக்க மரம்போன்ற பெரிய மரங்களின்கீழ் இடியின் போது தங்கியிருக்கக் கூடாதென டாக்டர் டார்க் கூறுகிறார்.

*　　*　　*

குதிரையில்லா வண்டியை முதல் முதல் ஒயில்ட்கூஸ் என்பவர் 1519-ம் ஆண்டில் உற்பத்தி செய்தார்.

*　　*　　*

வெள்ளைப் பெண்களை ஏமாற்றி துருக்கிக்குக் கொண்டு வருவதை சட்ட விரோதமானதெனத்தடுத்து துருக்கி சர்க்கார் ஒரு சட்டஞ் செய்திருக்கிறார்கள்,

*　　*　　*

கிருஷ்ணகர் என்னுமிடத்தில் ஒரு போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் ஒரு திருடனைப் பிடித்தார். திருடன் சப் இன்ஸ்பெக்டர் கன்னத்தை கடித்துத் தப்பித்து ஓடிவிட்டான். திருடன் கடித்தகடியால் சப் இன்ஸ்பெக்டர் கன்னத்தின் சதை துண்டாகிவிட்டது.

"லக்ஷமி"

ஒரு சிறந்த மாதப் பத்திரிகை.

லக்ஷிமி ஒவ்வொரு இங்கிலீஷ்மாதம் 15-ல் பல அரிஞர்களால் எழுதப்படும் அரிய கட்டுரைகள் சுவை ததும்பும் கதைகள், விகடத் துணுக்குகள், பெரியாரின் திருமொழிகள், சரித்திரம், வைத்தியம் முதலிய விஷயங்களோடு வெளிவரும்.

வருடசந்தா உள்நாடு	1—0—0
வெளி நாடு	1--8—0

"லக்ஷிமி ஆபீஸ்"
திருநெல்வேலி ஜங்ஷன்.

"கல்வி"

இஃதோர் மாத சஞ்சிகை. பொது மக்களின் அறிவு வளர்ச்சிக்கென வெளிவருவது குறைந்த சந்தாவில் நிறைந்த விஷயங்களைக் காணவேண்டுமானல் கட்டாயம் "கல்வி"யைப் படியுங்கள் சிறந்த கட்டுரைகள், உயர்ந்த கதைகள், கனிந்த கவிதைகள் எல்லாம் இதில் இருக்கிறது வருட சந்தா 1 ரூபாய் தனிப் பிரதி 1½ அணு

'கல்வி நிலையம் 251, பங்கமாரி வீதி,
இரங்கூன்.

"சிறுவர் அறிவுக்கதிர்"

அறிவுடையப் பெற்றோர் தம்மக்கட்குத்தேடும் அரும் பெருஞ் செல்வம் அறிவு விகசித மாவதற்கான கட்டுரைகள் சிறந்தது பாலர் முதல் விருத்தர்வரை அனைவரும் வாசித்துப் பயனடையத்தக்கது. அறிஞர்களெழுதிய அனுபவமிக்க கட்டுரைகள் அமைந்து விளங்கியது.

மாதிரிப்பிரதிக்குக் காலணு ஸ்டாம்பு 5 அனுப்பவும்.
வருட சந்தா உள்நாடு 12 அணு வெளிநாடு ரூ. 1-4-0

"சிறுவர் அறிவுக்கதிர்" ஆபீஸ்,
ஈரோடு, S.(இந்தியா)

"SAMARASAM" Regd. No. M. 3552.

Grand Opening of
Bata Shoe Store,
At VILLUPURAM.

Ladies and Gentlemen,

We beg to invite the attention of the public that we have got beautiful varities of shoes for children and adults. We therefore request the public to pay their kind visit to the shop and satisfy their wants. We are selling the best shoes at Moderate prices. A trial will convince you.

Address,
6 & 7 Laly Building,
Pondy Road,
VILLUPURAM.

Manager
Bata Shoe Store,
VILLUPURAM.
M. Sreeramalu.

புடவையில் ஓர் புதுமை
"ஹீரா பட்டுப்புடவை"

அசல் பட்டு. சலவைக்கு நேர்த்தியானது.
உன்னதமான பூக்கரைகள். ரம்மியமான ரகம்.
கிடைக்கக்கூடிய கலர்கள்:— இய்யவெள்ளை, கிரீம் பிஸ்கத், ஆரஞ்சு, லவண்டர், கத்திரிப்பூ, சிலேட் முதலிய பல

10 முழம் நீளம் 2½ அகலம் புடவை 1-க்கு ரூ. 2—8—0,
12 முழம் நீளம் ,, ,, 1-க்கு ரூ. 2—15—0

" சுபாஷ் பட்டு அங்கவஸ்திரம் "

அசல் பட்டு, அழகிய சிறுகரை, சலவைக்கு நேர்த்தியானது.
5 முழநீளம் 2½ அகலம் பட்டு 1-க்கு 1—12—0. முந்துங்கள்

கே. எஸ். முத்தையா கம்பெனி,
சில்க் அவுஸ் காசி.